உலக சக்திகளை அமைதியின் பக்கம் வழிநடத்துவதில் கலீஃபாக்கள் மேற்கொண்ட முயற்சிகள் பக்கம் 3

கிலாஃபத் அமைப்பு ஒழுங்குமுறைக்கான உத்திரவாதம் பக்கம் 10

காதியானும் அதன் புனித, வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களும் (தொடர்-8) பக்கம் 15

சந்திராயனும் ஆதித்தியாவும் பக்கம் 21


மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | October 2023 | Vol. 2 - Issue No. 11
Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 96297 46340

ஜின் மனிதர் கூட்டத்தினரே! வானங்கள் பூமி ஆகியவற்றின் எல்லைகளை விட்டும் வெளியேறிச் செல்ல உங்களுக்கு வலிமை இருந்தால் செல்லுங்கள். ஆனால், சான்று வலிமையினாலன்றி உங்களால் செல்ல முடியாது. (திருக்குர்ஆன் 55:34)





# திருக்குர்ஆன்

مَا كَانَ مُحَمَّدٌ أَبَآ أَحَدٍ مِّن رِّجَالِكُمْ
وَلَٰكِن رَّسُولَ اللَّهِ وَخَاتَمَ النَّبِيِّينَ ۗ
وَكَانَ اللَّهُ بِكُلِّ شَيْءٍ عَلِيمًا

முஹம்மது உங்களுள் எந்த ஆணுக்கும் தந்தை இல்லை. ஆனால் (அவர்) அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கெல்லாம் முத்திரையாகவும் விளங்கு -கின்றார். மேலும் அல்லாஹ் எல்லாவற்றையும் நன்கு அறிந்தவனாவான். (33:41)



# ஹதீஸ்

عَنِ الْعِرْبَاضِ بْنِ سَارِيَةَ السُّلَمِيِّ قَالَ سَمِعْتُ
رَسُولَ اللهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ
إِنِّي عَبْدُ اللهِ فِي أُمِّ الْكِتَابِ لَخَاتَمُ النَّبِيِّينَ
وَإِنَّ آدَمَ لَمُنْجَدِلٌ فِي طِينَتِهِ
(مسند احمد بن حنبل مسند الشاميين 17295)

ஹஸ்ரத் இர்பாஸ் பின் ஸாரியா சுலமி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டேன். அன்னார் இவ்வாறு கூறினார்கள்:

“ஆதம் படைக்கப்பட்டுக் கொண்டிருந்த போதிலிருந்தே நான் அல்லாஹ்வின் அடியானாகவும் காத்தமுன் நபிய்யீன் ஆகவும் ஆக்கப்பட்டுள்ளேன்.”

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் முஸ்னதிஸ் ஷாமியீன் 17295)


# உலக சக்திகளை அமைதியின் பக்கம் வழிநடத்துவதில் கலீஃபாக்கள் மேற்கொண்ட முயற்சிகள்

ரஃபீக் அஹ்மது ஹயாத் சாஹிப் அமீர் ஜமாஅத், U.K.

தமிழாக்கம்: R. ஷஃபீக் அஹ்மது

அன்பிற்குரிய ஹுஸூர் அவர்களே! நமது ஜல்ஸாவின் மதிப்பிற்குரிய விருந்தினர்களே! மேலும் உலகெங்கிலும் உள்ள நமது அன்பார்ந்த பார்வையாளர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாத்துஹு. உங்கள் மீது அல்லாஹ்வின் சாந்தியும் அருள்களும் உண்டாவதாக.

உலக சக்திகளை அமைதியின் பக்கம் வழிநடத்துவதில் மதிப்பிற்குரிய குல∴பா (கலீ∴பாக்கள்) மேற்கொண்டுள்ள முயற்சிகளைக் குறித்துப் பேசுவதற்கு இன்று எனக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இது நிச்சயமாக ஒரு விரிவான தலைப்பாகும். எனவே இந்தத் தலைப்பை என்னால் முழுமையாக விளக்க முடியாது என்பதை நிச்சயம் நான் அறிவேன். எவ்வாறிருப்பினும் நான் என்னால் முடிந்த வரை முயற்சி செய்வேன்.



அமைதிக்கான பரவலான தேவை இருந்தும் கூட, இன்று நாம் எத்தகைய உலகில் வாழ்கிறோம் என்றால் அதில் அநீதியும் வேற்றுமையும் நிறைந்துள்ளது. இதன் காரணமாக நமக்கு ஒரு கேள்வி எழுகிறது: அதாவது, பல்வேறு துறைகளில் சிறப்பான முன்னேற்றங்களை அடைந்த பிறகும் கூட, அடிப்படைத் தேவையாக இருக்கின்ற அமைதியை ஏன் நம்மால் நமது வாழ்வில் நிறுவ முடியவில்லை? இன்று நாம் உலகளாவிய அமைதி மற்றும் ஒழுங்கை நிலைநாட்ட ஐக்கிய நாடுகள் சபை போன்ற அரசியல் அமைப்புகளைச் சார்ந்துள்ளோம். ஆயினும், உலகெங்கிலும் நடைபெற்று வரும் நிகழ்வுகள் இந்த அமைப்பின் தோல்விக்குச் சான்றாக இருக்கின்றன.

உலகம் அதன் படைப்பாளனிடம் இருந்து விலகிச் சென்று விட்டது என்பதே இதன் காரணமாகும். மனித நேயத்தின் அடிப்படையில் திருக்குர்ஆன் உலகின் எல்லா தேசங்களையும் நோக்கி இவ்வாறு கூறுகிறது:

“மக்களே! நாம் உங்களை ஆண் பெண்ணிலிருந்து படைத்தோம். நீங்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்காக, நாம் உங்களைக் கோத்திரங்களாகவும், இனங்களாகவும் ஆக்கியுள்ளோம். நிச்சயமாக உங்களுள் அதிக இறையச்சம் கொண்டவரே அல்லாஹ்வின் பார்வையில் அதிக கண்ணியத்திற்குரியவராவார். நிச்சயமாக அல்லாஹ் எல்லாம் அறிந்தவனும் எல்லாம் உணர்ந்தவனுமாவான்.” (49:14)

உலக வரலாற்றையும் எல்லா மார்க்கங்களையும் ஆதாரங்களின் அடிப்படையில் ஆய்வு செய்து பார்க்கும் போது, ஒவ்வொரு மார்க்கத்தைப் பின்பற்றியவர்களும் காலப்போக்கில் அதன் உண்மையான போதனைகளை விட்டு விலகிச் சென்று விட்டதையும் அதன் காரணமாக உள்ளார்ந்த பிரிவினை மற்றும் முரண்பாடுகள் தோன்றியதையும் நம்மால் காண இயலும். இந்தப் பிரிவினையையும் வேற்றுமைகளையும் நம்மால் உலகெங்கும் காண முடிகிறது.

இதன் காரணம் என்னவென்றால், இத்தகையதொரு ஆன்மிக இருள் நிறைந்த காலகட்டத்தில் உண்மையான அமைதி நிறைந்த இஸ்லாமிய போதனைகளின் பக்கம் மனித குலத்தை மீண்டும் வழிநடத்த எல்லாம் வல்ல இறைவன் புறமிருந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் இமாம் மஹ்தியாகவும் ஒரு சீர்திருத்தவாதி அனுப்பப்படுவார் என்று 1400 வருடங்களுக்கு முன்னதாக இஸ்லாத்தின் புனிதத் தோற்றுநர் முன்னறிவித்துள்ளார்கள்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உண்மையான மற்றும் முற்றிலும் அமைதி நிறைந்த இஸ்லாமிய போதனைகளின் மூலம் நமக்கு ஒளியூட்டினார்கள். இதன் காரணமாகவே இன்று ஜமாஅத் “எல்லாரிடத்தும் அன்பு, எவரிடத்தும் இல்லை வெறுப்பு” என்ற ஆற்றல் மிக்க குறிக்கோளின் பின்னால் நிற்கிறது.



அன்னார் ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.்.பா (ஸல்) அவர்களது அருளுக்குரிய முன்மாதிரியினால் வழிநடத்தப் -பட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உலக வரலாற்றிலேயே தலைசிறந்த அரசியல் சாசனத்தை இயற்றினார்கள் என்று கூறினால் அது மிகையாகாது. அதுவே மதீனாவின் அரசியல் சட்டம் அல்லது ஆவணமாகும். இந்த அரசியல் சாசனமானது ஆங்கிலேய உரிமை சாசனத்தை விட ஏறத்தாழ ஆறு நூற்றாண்டுகள் முந்தையதாகும். ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.்.பா (ஸல்) அவர்கள் மதீனாவின் அரசியல் சாசனத்தை ஒரு சிறுபான்மையரின் ஆட்சியாளராக இருந்த போது வடிவமைத்தார்கள். பதிவு செய்யப்பட்டுள்ள வரலாற்றில் காணப்படும் மனித உரிமைகளுக்கான முதல் ஆவணம் இதுவேயாகும். மேலும் இன்று எல்லா வளர்ச்சியடைந்த நாடுகளாலும் பயன்படுத்தப்படும் சட்டதிட்டங்களின் அடித்தளமாகவும் இது அமைந்துள்ளது.

கடந்த காலத்தில் நாம் கண்டது என்னவென்றால், எதுவரை இஸ்லாம் அதன் உண்மையான மற்றும் அழகிய வடிவத்தில் பின்பற்றப்பட்டு வந்ததோ அதுவரை உலகம் அருளுக்குரிய காலகட்டத்தைப் பெற்றிருந்தது. இக்காலக் கட்டத்தையே வரலாறு கண்டுபிடிப்புகளின் பொற்காலம் என பதிவு செய்துள்ளது. இந்தக் காலக்கட்டத்தில் ஏற்பட்ட வளர்ச்சிகள் ஐரோப்பிய மறுமலர்ச்சிக்கும் அறிவொளியின் சகாப்தத்திற்கும் வழிவகை செய்தன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருமுறை கூறினார்கள்: “உங்களுக்குத் தீங்கிழைத்தவரை மன்னியுங்கள். உங்களுடன் தொடர்பைத் துண்டித்துக் கொண்டவருடன் இணைந்து கொள்ளுங்கள். உங்களுக்குத் தீமை செய்பவருக்கு நன்மை செய்யுங்கள். மேலும் உங்களுக்கே எதிராக அமைந்திருப்பினும் உண்மையையே பேசுங்கள்.” அன்னார் பெரும் அநீதிக்கு ஆளாக்கப்பட்ட போதிலும் எப்பொழுதும் அமைதி மற்றும் நீதிக்காக பாடுபட்டார்கள். இன்று மார்க்க மற்றும் மதச்சார்பற்ற சிந்தனையாளர்கள் ஆகிய இருசாராராலும் அங்கீகரிக்கப் -பட்டுள்ள புகழை விட்டுச் சென்றுள்ளார்கள். ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.்.பா (ஸல்) அவர்கள் தமது இறுதி உரையில் எல்லா தேசங்கள் மற்றும் இனங்களின் சமத்துவத்தைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். இறையச்சம் மட்டுமே நமது தரத்தைத் தீர்மானிக்கும் அளவீடாக இருக்கவேண்டும் என அன்னார் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமைதிக்காக உழைத்ததைப் போன்றே அன்னாருக்குப் பின் அவர்களது பிரதிநிதிகளும் உழைத்தனர். அன்னாரது மறைவிற்குப் பிறகு, இஸ்லாத்தின் சரியான மற்றும் உண்மையான போதனைகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதை உறுதி செய்வதற்காக கிலா.்.பத் அமைப்பு உருவாக்கப்பட்டது.

கிலா.்.பத் எல்லாம் வல்ல அல்லாஹ்வால் வழங்கப்பட்ட இறை வாக்குறுதியாகும். திருக்குர்ஆன் அதிகாரம் அந்நூர் வசனம் 56-ல் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: “மேலும் அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை அவர்களின் முன்னோர்களை கலீ.்.பாவாக (தலைவராக) ஆக்கியது போன்று இப்பூமியில் கலீ.்.பாவாக ஆக்குவதாகவும் அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதற்காகவும் அவன் அவர்களுக்கு அவர்களது அச்சத்தின் நிலைக்குப் பிறகு (அதை) அமைதியின் நிலையாக மாற்றுவதாகவும் அவர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான். அவர்கள் என்னை வணங்குவார்கள். எதனையும் எனக்கு இணையாக்க மாட்டார்கள். இதன் பின்னரும் நிராகரிப்பவர்கள் கட்டுப்படாதவர்களாவர்.”

முதலாவதாக தேர்ந்தெடுக்கப்பட்ட கலீ.்.பா ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆவார்கள். அன்னார் தமக்கு முன்பாக நிறுவப்பட்ட முன்மாதிரியைப் பின்பற்றியவாறு வெவ்வேறு சமூகங்களுக்கு இடையில் எந்தப் பாகுபாடும் இருக்கக் கூடாது என்பதை உறுதி செய்ய மாபெரும் முயற்சிகளை மேற்கொண்டார்கள். அன்னார் திறமை மற்றும் மதிநுட்பத்துடன் செயல்பட்டு முஸ்லிம் சமுதாயத்தை ஒருங்கிணைக்க அமைதியான வழிமுறைகளைப் பயன்படுத்தினார்கள். மேலும் தேவையற்ற சச்சரவுகளை விட அமைதியான சூழலுக்கு முன்னுரிமை வழங்கினார்கள்.

அன்னாரது கிலா.்.பத் 2 ஆண்டுகளே நீடித்தது. ஆயினும் அந்தக் காலக்கட்டத்தில் இஸ்லாத்தின் அமைதியான விரிவாக்கத்திற்கான அடித்தளத்தை அவர்கள் நிறுவினார்கள். இரண்டாவது கலீ.்.பாவாகிய ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது நீதி மிகுந்த ஆட்சியால் அறியப் -பட்டார்கள். அன்னார் ஒரு விரிவான சட்ட அமைப்பை நிறுவி முஸ்லிம் பேரரசை விரிவுபடுத்தினார்கள்.



முஸ்லிம்களால் ஜெருசலேம் வெற்றி கொள்ளப்பட்ட போது அன்னார் செய்த உடன்படிக்கையில் அங்கு வாழ்ந்து வந்த கிறித்தவ மக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டதோடு மட்டுமல்லாமல் அவர்களது மார்க்கச் சுதந்திரம் மற்றும் சொத்துரிமைக்கான உத்திரவாதமும் வழங்கப்பட்டது. இது உண்மையிலேயே மார்க்க நல்லிணக்கம் மற்றும் நீதியை நிலைநாட்டும் உணர்வை எடுத்துக் காட்டுகின்றது.

அடிமைகளாகிக் கொண்டிருந்த மக்களை மீட்டெடுத்து மேலும் சமத்துவமிக்க ஒரு சமுதாயத்தை உருவாக்கவும் அன்னார் குறிப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது மக்களின் நலனுக்காக எந்த அளவு கவலை கொண்டவராக இருந்தார்கள் என்றால், அன்னார் இரவு நேரத்தில் மதீனா நகரில் மாறுவேடத்தில் உலா சென்று எவரேனும் உதவி தேவைப்படுபவர் உள்ளனரா என்று பார்த்து வந்தார்கள்.



ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களது செழுமையான கிலா∴பத் காலக்கட்டத்தில் நிர்வாகச் சீர்திருத்தங்கள், பொதுநலன் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தப்பட்டது. மேலும் எதிர்ப்பு மற்றும் உள்நாட்டுக் கிளர்ச்சி ஆகியவற்றைச் சந்திக்க நேர்ந்த போதிலும் அமைதிக்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களது கிலா∴பத் காலக்கட்டத்தில், நாட்டில் சட்டம் ஒழுங்கை மீட்டெடுப்பதே தமது முதன்மையான கடமை என அன்னார் அறிவித்தார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தம்மால் முடிந்த வரை சண்டை மற்றும் இரத்தம் சிந்துதலைத் தவிர்த்தார்கள். குறிப்பாக ஜமல் (ஒட்டகப்) போரின் தருணத்தில் இதனைக் காணலாம். அன்னாரது போர்த் தளபதிகள் போர் நடவடிக்கைகளைத் தொடங்குவது குறித்து அவர்களிடம் வழிகாட்டல் கேட்டபோது, அமைதிக்கான எல்லா வழிகளும் அடைக்கப்படாத வரை போர் தொடங்கப்படக் கூடாது என அன்னார் கட்டளையிட்டார்கள். அமைதிப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தபோது, முதல் அம்பு தம் புறத்திலிருந்து எய்யப்படக் கூடாது என அன்னார் வலியுறுத்தினார்கள். “நீதியின் குரலுக்கு அவர்கள் செவிசாய்க்கவில்லை எனில் பிறகு அவர்களே முதலில் போரைத் தொடங்கட்டும்” என அன்னார் அறிவுறுத்தினார்கள்.

நேர்வழி பெற்ற கலீ∴பாக்களில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் இறுதி கலீ∴பாவாக இருந்தார்கள். அன்னாரது மறைவைத் தொடர்ந்து கிலா∴பத் ஓர் அரசாட்சியாக உருமாறியது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கிலா∴பத்தின் எதிர்காலம் குறித்து பின்வரும் ஹதீஸில் இவ்வாறு கூறியுள்ளார்கள்: “அல்லாஹ் நாடும் வரை உங்களிடையே நபித்துவம் இருக்கும். பிறகு அவன் அதனை முடிவிற்குக் கொண்டு வருவான். பிறகு அதனைத் தொடர்ந்து அவன் நாடும் வரை நபித்துவ வழியில் கிலா∴பத் இருக்கும். பிறகு அவன் அதனை முடிவிற்குக் கொண்டு வருவான். அதனைத் தொடர்ந்து கொடுங்கோல் மன்னராட்சி வரும். அல்லாஹ் நாடும் வரை அது இருக்கும். பிறகு அது முடிவு பெறும். அதன் பிறகு சர்வாதிகார ஆட்சி நிகழும். அல்லாஹ் நாடும் வரை அது நீடிக்கும். பிறகு அவனது கட்டளையின் படி அது முடிவு பெறும். பிறகு நபித்துவ வழியில் கிலா∴பத் தோன்றும். இதற்குப் பிறகு அன்னார் அமைதியாகி விட்டார்கள்.”

கிலா∴பத் அமைப்பு மீண்டும் கொண்டு வரப்படும் என்ற வாக்குறுதியை முஸ்லிம் உம்மத்திற்கு இந்த ஹதீஸ் வழங்குகிறது. எவ்வாறிருப்பினும், கிலா∴பத் அமைப்பை உயிர்ப்பிக்க வேண்டுமானால் ஒரு நபியின் வருகையை எதிர்பார்க்க வேண்டும்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது வருகையின் முதன்மையான குறிக்கோள், இஸ்லாமிய போதனைகளை அதன் தூய்மையான அசல் வடிவத்தில் உயிர்ப்பித்து உலகமக்கள் அனைவரையும் ஒரே பதாகையின் கீழ் ஒன்றுபடுத்துவதே ஆகும்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: “எனது நாட்டு மக்களே! உலகளாவிய நல்லிணக்கத்தைப் போதிக்காத எந்தவொரு மார்க்கமும் மார்க்கமே அல்ல. அதுபோலவே, நல்லிணக்கப் பண்பு இல்லாத ஒரு மனிதன் மனிதனே அல்ல.”

அன்னார் தமது வாழ்நாளில் பல்வேறு மார்க்க மற்றும் அரசியல் தலைவர்களை அமைதி மற்றும் ஒற்றுமையின் தூதுச் செய்தியின் பக்கம் அழைத்தார்கள். எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பால் மீண்டும் அழைத்தார்கள். குறிப்பாக, விக்டோரியா ராணியின் ஆண்டு விழாக் கொண்டாட்டத்தின் தருணத்தில் அன்னார் ராணிக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். மேலும் உண்மையான இஸ்லாம் மற்றும் அமைதி தொடர்பான தமது தூதுச் செய்தியை இங்கிலாந்திற்கு வழங்கினார்கள். தற்போதைய காலக்கட்டம் வாளால் செய்யப்படும் ஜிஹாதிற்கான காலக்கட்டம் அல்ல. மாறாக பேனாவினால் செய்யப்படும் ஜிஹாதிற்கான காலக்கட்டம் என அன்னார் முஸ்லிம் உலகிற்குக் கற்பித்தார்கள்: வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மல்∴பூஸாத் தொகுதி 8 பக்கம் 20-ல் பின்வருமாறு எழுதியுள்ளார்கள்: ‘இப்பொழுது (வாளினால் அல்ல. மாறாக) பேனாவினாலேயே ஜிஹாத் தொடுக்கப்பட வேண்டும்.’

அன்னாரது தூதுச் செய்தி அஹ்மதிய்யத்தின் கலீ∴பாக்களால் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. உண்மையான அமைதியின் வடிவமாக இருக்கக் கூடிய இஸ்லாத்தின் இந்த ஆழமான புரிதலை ஏற்றுக் கொள்ளுமாறு மனித குலத்திற்குக் கடந்த 115 வருட காலமாக அஹ்மதிய்யத்தின் கலீ∴பாக்கள் தொடர்ந்து அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது முதல் கலீ∴பா ஹஸ்ரத் மவ்லானா ஹக்கீம் நூருத்தீன் (ரலி) அவர்கள் ஆவார்கள்.

இஸ்லாத்திற்கு அன்னார் ஆற்றிய தொண்டுகள் எப்பொழுதும் சீர்தூக்கிப் பார்க்கக் கூடியவையாக இருக்கின்றன. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது பாரசீகக் கவிதை ஒன்றில் அன்னாரைப் பாராட்டியுள்ளார்கள். இது அன்னாரது அர்ப்பணிப்பு மற்றும் உயர்ந்த தகுதியை அங்கீகரிக்கும் வகையிலான ஓர் அழகிய சாட்சியம் ஆகும்.

“என்னைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் நூருத்தீனாக இருந்து விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்! ஒருவருடைய இதயம் உண்மையின் ஒளி மற்றும் உறுதியான நம்பிக்கையால் ஒளியூட்டப்படும் போது மட்டுமே இது சாத்தியமாகும்.”

ஓர் அமைதியான சூழல் மற்றும் அமைதி நிறைந்த சமுதாயத்தின் திறவுகோல் ஒருவர் மற்றவர் மீது செலுத்தும் கருணையாகும் என்று ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் (ரலி) அவர்கள் கற்பித்தார்கள்.

திருக்குர்ஆனின் அதிகாரம் அஸ்ர்-க்கான தமது விளக்கவுரையில், ஹுஸூர் (ரலி) அவர்கள் பின்வரும் விளக்கத்தைக் கூறியுள்ளார்கள்: “அமைதி என்பது இல்லாமல், நம்மால் மார்க்க விஷயங்களிலும் உலக விவகாரங்களிலும் மேன்மை அடைய முடியாது. எனவே, அமைதியை மேம்படுத்துவதற்காக உழைப்பதன் முக்கியத்துவத்தை நான் வலியுறுத்துகிறேன். அமைதியை நிறுவ ஆற்றலும் தேவைப்படுகிறது. அந்த ஆற்றல் அரசாங்கத்தின் வரம்பிற்குள் இருக்கின்ற ஒரு பண்பாகும். நான் முகஸ்துதி செய்வதற்காக இதனைக் கூறவில்லை. மாறாக ஒரு ஜமாஅத் என்கிற முறையில் நீங்கள் அமைதியை



விரும்பும் ஒரு நிலைபாட்டைக் கடைபிடிக்க வேண்டும். மேலும் முன்னேற்றம் மற்றும் அமைதியான சூழலை உருவாக்க வேண்டும் என்ற உண்மையை உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.”

ஹஸ்ரத் கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மார்க்க அறிஞர்களின் ஒரு குழுவையும் தயார் செய்தார்கள். அந்தக் குழுவினர் உலகம் முழுவதும் பரவிச் சென்று அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்தனர். அந்த அறிஞர்களில் ஒருவர் சவுத்ரி பதேஹ் முஹம்மத் சியால் சாஹிப் ஆவார்கள். அன்னார் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை முழுமையாகப் பரப்பும் குறிக்கோளுடன் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டார்கள். நாம் அனைவரும் இன்று இங்கு இருப்பது இந்த முயற்சியின் வெற்றிக்கு ஒரு சாட்சியமாகும்.

கலீ∴பாவாக அன்னாரது காலக்கட்டம் சுருக்கமானதாக இருந்தது. ஆயினும் அந்தக் காலக்கட்டத்தில் ஜமாஅத்தின் ஒற்றுமை மற்றும் பாதையை நிறுவ அன்னார் உதவினார்கள்.

அன்னாரது மறைவைத் தொடர்ந்து, கிலா∴பத்தின் அணிகலன் இரண்டாவது கலீ∴பாவாகிய ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மத் (ரலி) அவர்களுக்கு அணிவிக்கப்பட்டது. அன்னார் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களது வாக்களிக்கப்பட்ட மகன் ஆவார்கள். அப்போது அன்னாரது வயது 25 ஆக இருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அருளப்பட்ட ஒரு முன்னறிவிற்கு ஏற்ப அன்னார் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது, வாக்களிக்கப்பட்ட மகன் மற்றும் சீர்திருத்தவாதி என்று அழைக்கப்பட்டார்கள்.

அந்த முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது ஒரு பண்பு அவர் சிறைபட்டவர்களை விடுவிப்பார் என்பதாகும். பல்வேறு முஸ்லிம் நாடுகளை விடுவிக்க அன்னார் மேற்கொண்ட முயற்சிகளை அவர்களது எதிரிகள் கூட அறிந்திருந்தனர். குத்பாத்தே மஹ்மூதில் ஹுஸூர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: “உங்களுக்கு எனது அறிவுரை என்ன -வென்றால், நீங்கள் ஒரு நோக்கத்துடன் படைக்கப்பட்டிருக்கிறீர்கள்: அதாவது உலகை ஆட்டிப்படைக்கும் தீமைகளை ஒழித்து அமைதியை நிலைநாட்ட வேண்டும். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகையின் குறிக்கோள் சகோதரர்களை ஒன்றிணைப்பதையும் கடந்து, எதிரிகளையும் சகோதரர்களாக மாற்றும் பணியையும் உள்ளடக்கியதாகும் என்பதை உலகிற்கு வெளிப்படுத்திக் காட்ட வேண்டும்.”

அன்னார் அமைதியை நிலைநாட்ட தமது செல்வாக்கையும் ஞானமிக்க அறிவுரையையும் பயன்படுத்திய பல உதாரணங்கள் இருக்கின்றன. 1930-ஆம் ஆண்டு இந்து ஏகாதிபத்தியமும் காஷ்மீரின் டோக்ரா ஆட்சியாளர்களும் முஸ்லிம் பெரும்பான்மையினரை துன்புறுத்தத் தொடங்கிய போது, அவர்கள் முஸ்லிம்களது எல்லா உரிமைகளையும் பறிக்க முற்பட்டனர். அந்த சமயத்தில் எல்லா முஸ்லிம் தலைவர்களும், நவாப்களும், அரசியல்வாதிகளும் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்கு உதவுமாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களை வேண்டினர். ஹுஸூர் அவர்களது அயராத முயற்சிகள் மற்றும் தலைமையின் விளைவாக அம்மக்களது இயக்கம் வெற்றி அடைந்தது. மேலும் காஷ்மீரிகளால் நிம்மதிப் பெருமூச்சு விட முடிந்தது.

இரண்டாவது உலகப் போரின்போது, புனித நிலத்திற்குள் (இன்றைய பாலஸ்தீன் மற்றும் இஸ்ரேல் பகுதிகள்) போர் நுழைவதற்கான சாத்தியக்கூறுகள் இருந்தன. ஹுஸூர் அவர்கள் புனித நிலத்திற்குள் சண்டை பரவுவதைத் தடுப்பதற்காக ஒரு உரை நிகழ்த்தினார்கள். அந்த சமயத்தில் பிரபலமாக இருந்த ‘ஜம்ஜம்’ என்கிற ஒரு செய்தித்தாள்

அன்னாரது இந்த சேவையைப் பின்வரும் சொற்களில் பாராட்டியது:

“இத்தகைய சூழ்நிலையில்.... எகிப்து மற்றும் ஹிஜாஸின் புனித நிலம் தொடர்பாக இமாம் சாஹிப் அவர்கள் இஸ்லாத்தின் மீது எத்தகைய அன்பை வெளிப்படுத்தி -யுள்ளார்கள் என்றால் நாம் அன்னாருக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம். மேலும் தமது கவலையை வெளிப்படுத்தியதன் வாயிலாக அன்னார் முஸ்லிம்களின் உணர்வுகளை சரியாக பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்கள்.”

1948-ஆம் ஆண்டு, பாலஸ்தீன் பிரிவினை விவகாரம் பாதுகாப்பு சபையில் விவாதிக்கப்பட்டு வந்தது. அரேபியர்களின் விருப்பத்திற்கு ஏற்ப, ஹுஸுர் அவர்கள் ஹஸ்ரத் சவுத்ரி முஹம்மத் ஃ.பருல்லாஹ் கான் சாஹிப் அவர்களை அமெரிக்காவில் தங்கியிருந்து அரேபியர்களின் வழக்கை வாதாடுமாறு அறிவுறுத்தினார்கள். அரபு குழுக்கள் மூலம், வேறு எந்தத் தலைவராலும் செய்ய முடியாத வகையில் இஸ்லாமிய மார்க்கத்திற்காக அவர் தொண்டாற்றியுள்ளார்.”

ஹுஸுர் அவர்கள் அமைதிக்கான தமது தூதுச் செய்தியை உலகெங்கிலும் பரவச் செய்தார்கள். அன்னார் இங்கிலாந்திற்கு வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு பயணத்தை மேற்கொண்டார்கள். மேலும் உலகளாவிய சர்வ சமய மாநாட்டில் பங்கு பெற்றார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், இலண்டன் பள்ளிவாசலின் அப்போதைய இமாம் அப்துல் ரஹீம் தர்த் சாஹிப் முஹம்மது அலீ ஜின்னாவைச் சந்தித்து முஸ்லிம்களுக்காக வாதாடுவதற்காக இந்தியாவிற்குத் திரும்புமாறு கேட்டுக் கொண்டார். அதன் விளைவாக மார்ச் 1933-ஆம் ஆண்டு ஜின்னா இந்திய அரசியலுக்குத் திரும்புவதாக அறிவித்தார். ஃ.பஸ்ல்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

உங்களுக்கு எனது அறிவுரை என்னவென்றால், நீங்கள் ஒரு நோக்கத்துடன் படைக்கப்பட்டிருக்கிறீர்கள். அதாவது உலகை ஆட்டிப் படைக்கும் தீமைகளை ஒழித்து அமைதியை நிலைநாட்ட வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகையின் குறிக்கோள் சகோதரர்களை ஒன்றிணைப்பதையும் கடந்து, எதிரிகளையும் சகோதரர்களாக மாற்றும் பணியையும் உள்ளடக்கியதாகும் என்பதை உலகிற்கு வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். (குத்பாத்தே மஹ்மூது)



ஹுஸுர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தவாறு ஒரு தந்தி அனுப்பினர். அதில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தனர்: “நாங்கள் பெரிதும் நிம்மதி அடைந்துள்ளோம். இது எங்கள் கோரிக்கைகளைப் பெரிதும் ஆதரிக்கும் என நம்புகிறோம்.”

மேலும் ஹுஸுர் அவர்களின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப, ஹஸ்ரத் சவுத்ரி முஹம்மத் ஃ.பருல்லாஹ் கான் சாஹிப் பல்வேறு முஸ்லிம் நாடுகளின் விடுதலைக்காகப் போராடினார்கள். இது பிரபலமான எகிப்திய தலைவர் அல்-சையத் முஸ்த.ஃ.பா மூமின் என்பவரால் அங்கீகரிக்கப் -பட்டுள்ளது. அவர் கூறுகிறார்: “சவுத்ரி முஹம்மது ஜ.ஃ.பருல்லா கான் இஸ்லாமிய உலகில் பொறாமைப் -படத்தக்க ஓர் இடத்தைப் பெற்றுள்ளார். மத்திய கிழக்கு நாடுகளில் பொதுவாகவும், எகிப்து மற்றும் பிற அரபு நாடுகளில் குறிப்பாகவும், அவர் ஒரு தலைசிறந்த அரசியல்வாதியாக பார்க்கப்படுகிறார். ஐக்கிய நாடுகள் சபையில் துனிசியா, மொராக்கோ, ஈரான் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுக்கு அவர் அளித்த பலமான ஆதரவின் பள்ளிவாசலில் பெருநாளுக்காகக் கூடியிருந்தவர்களிடையே அவர் ஓர் உரை நிகழ்த்தினார். பிறகு நடந்த நிகழ்வுகள் வரலாற்றில் முக்கிய இடம் பெற்றுள்ளன.

அன்னார் ஜமாஅத்திற்குத் தொடர்ந்து இவ்வாறு நினைவூட்டி வந்தார்கள்: “நினைவில் கொள்ளுங்கள். உலகில் அமைதியை நிறுவுவதற்காக நீங்கள் (ஒரு ஜமாஅத்தாக) படைக்கப்பட்டுள்ளீர்கள். தற்போது எல்லாப் புறமும் சண்டைகளும் சச்சரவுகளும் பரவியிருப்பதை நாம் காண்கின்றோம். இந்த சச்சரவுகள் மற்றும் சீர்குலைவுகளின் போது நமது தற்போதைய தலைமுறை அல்லது அடுத்த தலைமுறை அமைதி மற்றும் சமரசத்தை நிலைநாட்டுவதற்கான வாய்ப்பையும் கண்ணியத்தையும் பெறுவது பெரிதும் சாத்தியமானதாகும். எவ்வாறிருப்பினும், நிச்சயாக இந்த வாய்ப்பு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைக் குறித்து ஓர் இறையறிவிப்பில் ‘அமைதியின் இளவரசர்’ என்று கூறப்பட்டுள்ளது.” (தஸ்கிரா - ஆங்கிலப் பதிப்பு பக்கம் 1061)

(தொடரும்)

சிறுவர் பகுதி

# மார்க்க அறிவுப் புத்தகம்




தமிழாக்கம்: M.M. இப்ராஹீம்

## 4. அஹ்மதிய்யத்

51. காதியானில் 'தஅலீமுல் இஸ்லாம் ஸ்கூல்' எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

1898-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

52. அஹ்மதிய்யா ஜமாஅத்தில் துவங்கப்பட்ட முதல் செய்தித்தாள் எது? அது எப்போது துவங்கப்பட்டது?

'அல்ஹகம்' ஆகும். இது 1897-ல் துவங்கப்-பட்டது.

53. 'அல் ஹகம்' நாளிதழின் முதல் தொகுப்பாளர் யார்?

ஹஸ்ரத் ய..கூப் அலீ இர்..பானி (ரலி) அவர்கள் இதன் முதல் தொகுப்பாளர் ஆவார்கள்.

54. அஹ்மதிய்யா ஜமாஅத்தில் துவங்கப்பட்ட முதல் சிறுவர்களுக்கான பத்திரிகை எது?

'தஷ்ஹீஸுல் அஸ்ஹான்' ஆகும்.

55. இந்தப் பத்திரிகையை யார் எப்போது துவங்கினார்கள்?

ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் இந்தப் பத்திரிகையை. 1906-ல் துவங்கினார்கள்.

56. மினாரத்துல் மஸீஹ் எங்கு அமைந்துள்ளது?


காதியானிலுள்ள அக்ஸா பள்ளிவாசலில் மினாரத்துல் மஸீஹ் அமைந்துள்ளது.

57. மினாரத்துல் மஸீஹிற்கு அடித்தளம் இட்டவர் யார்? அது எப்போது கட்டி முடிக்கப்பட்டது?

1903-ஆம் ஆண்டு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இதற்கு அடித்தளமிட்டார்கள். இது 1916-ல் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்களால் கட்டி முடிக்கப்பட்டது.

58. சாஹிப்ஸாதா சய்யிது அப்துல் லத்தீ..ப் (ரலி) அவர்கள் யார்?

அன்னார் ஆ..ப்கானிஸ்தானில் பிறந்த ஒரு முஸ்லிம் தலைவர் ஆவார். மிகவும் கண்ணியத்திற்-குரிய இவர் ஆ..ப்கானிய மன்னர் முடிசூட்டும் விழாவில் கிரீடம் எடுத்து வைக்கும் அளவில் மதிப்பு மிக்கவர் ஆவார்.



59. அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டதால் அவருக்கு நிகழ்ந்தது என்ன?

ஆ..ப்கானில் உள்ள ஆலிம்கள் அனைவரும் இவரை 'நம்பிக்கை இழந்தவர்' எனப் பட்டம் சூட்டி கல்லெறிந்து கொல்லப்பட வேண்டுமென்று அறிவிப்பு செய்தார்கள். அதன்படி இவர் இடுப்பளவு மணலில் புதைக்கப்பட்டு கல்லெறிந்து ஷஹீதாக்கப்பட்டார். இவர் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றில் ஒரு மிகப் பெரிய உயிர்த் தியாகி ஆவார்.

60. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் காலத்தில் ஆப்கானிஸ்தானில் கொல்லப்பட்ட வேறு ஒரு நபரின் பெயர் கூறுக:

மவ்லவி அப்துர் ரஹ்மான் (ரலி) ஆவார்கள். இவரும் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டதால் ஷஹீதாக்கப்பட்டார்.

61. இந்த இரு காட்டுமிராண்டித்தனமான கொலை-களையும் இந்த உயிர்த் தியாகிகளின் வீரத்தையும் விளக்கமாக எடுத்துரைக்கும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் நூல் எது?

இந்த இரு நிரபராதியான உயிர்த் தியாகிகளின் காட்டுமிராண்டித்தனதான கொலைகளையும் அவர்களின் உயிர்த் தியாகங்களையும் விளக்கும் நூல் 'தஸ்கிரத்துஷ் ஷஹாதத்தைன்' என்பதாகும்.

62. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களால் பெறப்பட்ட ஒரு வெளிப்பாட்டில் 'முஸ்லிம்களின் தலைவர்' என்று அழைக்கப்பட்டவர் யார்?

ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சியால்கோட்டி (ரலி) ஆவார்கள்.

63. 'பெஹிஷ்தி மக்பரா' குறித்து கூறுக:

எவர் தமது வாழ்நாளில் தமது உடமைகளில் 10-ல் ஒரு பங்கை இறை வழியில் வழங்க உயில் எழுதி வைத்து கண்ணியமாகவும் நேர்மையாகவும் வாழ்வாரோ அவரது ஜனாஸாவை நல்லடக்கம் செய்யும் இடம் 'பெஹிஷ்தி மக்பரா' ஆகும்.

64. தமது முடிவு நெருங்கி விட்டது என்பதைக் குறித்து ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட முன்னறிவிப்பு குறித்து விளக்குக:

1908 மே 20-ஆம் தேதி அருளப்பட்ட இல்ஹாம்: 'அர் ரஹீல், தும்ம அர் ரஹீல் வல் மவ்த்து கரீப்' இதன் பொருள்: 'பிரிவின் காலம் வந்து விட்டது; பிரிவின் காலம் வந்து விட்டது. மரணம் நெருங்கி விட்டது' என்பதாகும்.

65. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எப்போது இறைவனடி சேர்ந்தார்கள்?

1908-ஆம் ஆண்டு மே 26-ஆம் தேதி ஒரு சிறிய உடல் நலக் குறைவிற்குப் பின்பு காலமானார்கள். அன்னாரின் ஜனாஸா அடுத்த நாள் மாலை 6.00 மணிக்கு காதியானிலுள்ள பெஹிஷ்தி மக்பராவின் ஒரு பகுதியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

66. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் பின்னர் கலீ∴பாவாகத் தேர்ந் -தெடுக்கப்பட்டவர் யார்?

ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் (ரலி) அவர்கள் ஆவார்கள். 1908-ஆம் ஆண்டு மே 27-ஆம் தேதி முதல் கலீ∴பாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

67. ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் (ரலி) அவர்களின் சொந்த ஊர் எது?

ஸர்கோதா மாவட்டத்திலுள்ள 'பேரா' என்ற கிராமமாகும்.

68. ஹஸ்ரத் நூருத்தீன் (ரலி) அவர்கள் எழுதிய நூல்கள் எவை?

1. ∴பஸல் அல்ஹுதாப் - அஹ்லே கிதாப் (உர்து)
2. தஸ்தீக் பராஹீனே அஹ்மதிய்யா (உர்து)
3. இப்தால் உலூஹியத்தே மஸீஹ் (உர்து)

69. எப்போது 'மதரஸா அஹ்மதிய்யா' அமைக்கப்பட்டது?

1909-ஆம் ஆண்டில் ஹஸ்ரத் முதல் கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மதரஸா அஹ்மதிய்யா -விற்கான அடிக்கல் நாட்டினார்கள்.

70. ஹஸ்ரத் முதல் கலீபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் எப்போது காலமானார்கள்?

1914 மார்ச் 13-ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலமானார்கள். அன்னாரின் ஜனாஸா காதியானில் உள்ள பெகிஷ்தி மக்பராவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

71. ஹஸ்ரத் நூருத்தீன் (ரலி) அவர்களுக்குப் பின் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது யார்?

ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

72. இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹிற்கான தேர்தல் எங்கு நடைபெற்றது?

காதியானிலுள்ள நூர் மஸ்ஜிதில் வைத்து நடைபெற்றது.

73. இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் எப்போது பிறந்தார்கள்?

1889-ஆம் ஆண்டு ஜனவரி 12-ஆம் தேதி சனிக் கிழமை பிறந்தார்கள். இவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களின் மகனாவார்கள்.

74. அஹ்மதிய்யத்திலிருந்து வேறுபட்டுச் சென்ற கூட்டம் எது? அதன் தலைவர் யார்?

வேறுபட்டுச் சென்ற கூட்டம் 'அஞ்சுமன் இஷாஅத்தே இஸ்லாம்' ஆகும். இதன் தலைவர் மவ்லானா முஹம்மத் அலி சாகிப் ஆவார். ஹஸ்ரத் முதல் கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் காலமானவுடன் இக்கூட்டம் லாஹூருக்குச் சென்று விட்டது.




75. ஹஸ்ரத் இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களால் எழுதப்பட்ட சில நூல்களைக் குறிப்பிடுக:

அவர்கள் பல நூல்களை எழுதியுள்ளார்கள். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை:

1) த∴ப்ஸீரே கபீர் (திருக்குர்ஆனின் பெரிய விரிவுரை)
2) த∴ப்ஸீரே ஸகீர் (திருக்குர்ஆனின் சிறிய விரிவுரை)
3) நிஸாமே நவ் (புதிய உலக அமைப்பு)
4) தாவத்துல் அமீர் (சிறு விளக்கத்துடன் கூடிய மொழியாக்கம்)
5) இஸ்லாம் கா இக்தஸாதி நிஸாம் (இஸ்லாத்தின் பொருளாதார அமைப்பு)

(தொடரும்...)

டாக்டர் ஸாஹித் கான் சாஹிப்
சதர் கஸா போர்டு, U.K.

# கிலாஃபத் அமைப்பு
## ஒழுங்குமுறைக்கான உத்திரவாதம்

தமிழாக்கம்: K.A. தாரிக் அஹ்மது

தலைவர் அவர்களே! சகோதரிகளே! மற்றும் சகோதரர்களே! ஏற்கனவே அறிவிக்கப்பட்டது போன்று, எனது உரையின் தலைப்பு 'கிலா∴பத் அமைப்பு ஒழுங்குமுறையின் உத்திரவாதம்' என்பதாகும்.

என் மனதிற்குப் பிடித்த ஒருவிஷயத்தைப் பற்றி பேசுவதை நான் பெருமையாகக் கருதுகிறேன். கிலா∴பத் என்பது முஸ்லிம் உம்மத்திற்கு மட்டுமல்ல; மனித குலத்திற்கே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகும்.

ஆரம்பத்திலேயே நான் இதனை தெளிவுபடுத்தி விடுகிறேன். எனது பேச்சில் குறிப்பிடப்படும் ஒழுங்குமுறை என்பது நமது சொந்த வாழ்க்கையில் நாம் காணும் ஒழுங்காகவும், மேலும் நமது ஜமாஅத்தில் இருக்கும் அமைப்பு முறையாகவும் புரிந்து கொள்ள வேண்டும். இவ்விரண்டும் கிலா∴பத் அமைப்பினால் உத்திரவாதம் அளிக்கப்படுகிறது.

இங்கு ஹதீக்கதுல் மஹ்தியில் நாம் கூடி இருப்பதும், MTA மூலமாக இலட்சக்கணக்கானோர் இந்த ஜல்ஸாவில் பங்கேற்பதும், நம்மிடையே இருக்கும் ஒழுங்குமுறைக்கு கிலா∴பத் அமைப்பே உத்திர-வாதமாக இருக்கிறது என்பதற்கான சான்றாகும்.

இறைவனால் நியமிக்கப்பட்ட கலீ∴பாக்கள் பூமியில் இறைவனின் பிரதிநிதிகள் ஆவர். அவர்கள் மனித வரலாற்றின் ஒவ்வொரு காலக்கட்டத்திலும், சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினருக்கும் ஒழுங்கை நிலைநாட்டுவதில் வழிகாட்டும் சக்தியாக உள்ளனர். இந்த தாக்கம் சர்வதேச அளவிலும், தனிப்பட்ட அளவிலும் உணரப்படுகிறது.

நாம் ஒழுங்குமுறையைப் பற்றி பேசும்போது, அது நம் வாழ்வின் ஒவ்வோர் அம்சத்தையும் உள்ளடக்கியது ஆகும். அது நான் ஓதிய திருக்குர்ஆனின் வசனங்களான சூரா முல்க்-ன் 4 மற்றும் 5-வது வசனங்களில் குறிப்பிடப்-பட்டுள்ள படைப்பின் ஒழுங்குமுறையின் பிரதிபலிப்பு ஆகும்.

الَّذِیْ خَلَقَ سَبْعَ سَمٰوٰتٍ طِبَاقًا ؕ مَا تَرٰی فِیْ خَلْقِ الرَّحْمٰنِ مِنْ تَفٰوُتٍ ؕ
فَارْجِعِ الْبَصَرَ ۙ هَلْ تَرٰی مِنْ فُطُوْرٍ ۝ ثُمَّ ارْجِعِ الْبَصَرَ كَرَّتَیْنِ یَنْقَلِبْ
اِلَیْكَ الْبَصَرُ خَاسِئًا وَّهُوَ حَسِیْرٌ ۝

இவ்வசனங்களின் மொழியாக்கம் இதுவாகும்: அவனே ஏழு வானங்களையும் அடுக்கடுக்காகப் படைத்துள்ளான். அளவற்ற அருளாள(னான இறைவ)னது படைப்பில் உம்மால் எந்தக் குறைபாட்டையும் காண இயலாது. மீண்டும் பார்ப்பீராக! (அதில்) ஏதேனும் குறைபாடு உமக்குத் தெரிகிறதா?

பின்னர் நீர் மீண்டும் மீண்டும் (துருவித் துருவிப்) பார்ப்பீராக! இறுதியில் உமது பார்வை தோல்வியடைந்து களைப்படைந்தவாறு உம்மிடமே திரும்பி விடும். (67:4-5)

இந்த வசனங்கள் பௌதீக பிரபஞ்சத்தின் ஒழுங்குமுறையின் பரிபூரணத்தைப் பற்றி பேசுகின்றன. இக்காலத்தின் இமாமான வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) அவர்கள் மறைவாக இருந்த திருக்குர்ஆனின் செல்வங்களை வெளிக்கொணர்ந்-தார்கள். "அல்லாஹ், ஒரு பிரபஞ்சத்தை அல்ல; இரண்டு








பிரபஞ்சங்களைப் படைத்துள்ளான். அறிவியல் புனைவுக் கதைகளில் வரும் நார்னியாவைப் போல் அல்லாத ஓர் இணையான பிரபஞ்சத்தைப் படைத்துள்ளான். அவை ஒரு பௌதீக மற்றும் ஓர் ஆன்மிக பிரபஞ்சம். இரண்டிலும் முழுமை காணப்படுகிறது என்று அன்னார் அழகாக விவரிக்கின்றார்கள்.

ஆன்மிகப் பிரபஞ்சத்தில் காணப்பட்ட பரிபூரண -மானது, அந்த முழு நிறைவான மனிதர், நபிமார்களின் முத்திரை நமது எஜமானர், எம்பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்களின் உருவில் அதன் உச்சத்தை அடைந்தது.

அன்னாரது வருகை, திருக்குர்ஆன் விவரிக்கும் இத்தகைய நேரத்தில் நிகழ்ந்தது.

ظَهَرَ الْفَسَادُ فِي الْبَرِّ وَالْبَحْرِ நிலத்திலும் கடலிலும் குழப்பம் பரவியுள்ளது. (30:42)

உலகமே இருளில் மூழ்கி இருந்தது. அந்த இருளைப் போக்க வெளிச்சத்திற்காக ஏங்கிய காலம் அது, ஓர் இமாமின் தேவை இருந்த காலமாக அது இருந்தது.

اَللّٰهُ نُوْرُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ அல்லாஹ் வானங்கள் பூமி ஆகியவற்றின் ஒளியாக விளங்குகின்றான். (24:36)

அல்லாஹ், விண்ணுலக ஆன்மிக ஒளியை அல்லாஹ்வின் கலீ∴பாக்களான தனது நபிமார்களின் மீது இறங்கச் செய்கிறான். அவர்கள் அதனைப் பாதுகாத்து, அதன் மூலம் மக்களை நேர்வழியில் வழிநடத்துகின்றனர். நபிக்குப் பிறகு, அல்லாஹ் இந்த ஒளியை அணைய விடுவதில்லை. நபியின் ஆன்மீக வாரிசு முறை அமைப்பானது, அந்த ஒளி பரந்து விரிவதை உறுதி செய்கிறது. மேலும் அதனை வெகுதூரம் பரப்பி உலகை தொடர்ந்து ஒளிரச் செய்கிறது.

தனது நூலான ஷஹாதத்துல் குர்ஆனில், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு விளக்குகின்றார்கள்:

கலீ∴பா என்பவர் வழித்தோன்றல் ஆவார். மேலும் உண்மையான பொருளில் ஒரு தூதரின் வழித்தோன்றல் என்பவர், அத்தூதரின் சிறப்புகளை பிரதிபலிப்பு மூலம் பெற்றவராக மட்டுமே இருக்க முடியும்.

இதுவே கிலா∴பத்துன் அலா மின்ஹாஜின் நுபுவ்வா. அதாவது நுபுவ்வத்தின் வழியில் கிலா∴பத் ஆகும் மேலும் இதற்கான வாக்குறுதி அதே அத்தியாயம், வசனம் 56-இல் தரப்பட்டுள்ளது.

وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِي الْاَرْضِ
كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ۠ وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ
الَّذِي ارْتَضٰى لَهُمْ وَلَيُبَدِّلَنَّهُمْ مِّنْ بَعْدِ خَوْفِهِمْ اَمْنًا

“அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை, அவர்களின் முன்னோர்களை கலீ∴பாவாக (தலைவராக) ஆக்கியது போன்று இப்பூமியில் கலீ∴பாவாக ஆக்குவதாகவும், அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களது மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும் அவன் அவர்களுக்கு அவர்களது அச்சத்தின் நிலைக்குப் பிறகு அமைதியின் நிலையாக மாற்றுவதாகவும் அவர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான்...”

ஆயத்தே இஸ்திக்லா∴பும் கிலா∴பத்தின் பண்புகளை விவரிக்கின்றது. மேலும் நமது வாழ்நாளில் கிலா∴பத்தே அஹ்மதியாவின் 115 ஆண்டு கால வரலாற்றில் இந்தப் பண்புகள் நிறைவேறி வந்ததைக் கண்டோம். இந்த கிலா∴பத் சாராம்சத்தில் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு நேர்வழி பெற்ற நான்கு கலீ∴பாக்களான கிலா∴பத்தே ராஷிதாவின் தொடர்ச்சி ஆகும்.




சமூகத்தில் அல்லது தனிநபர்களுக்குள் அமைதி நிலவினால் மட்டுமே ஒழுங்கை நிலைநாட்ட முடியும். கருத்து வேறுபாடும் அச்சமும் இருந்தால் அல்ல. ஹஸ்ரத் முதல் கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

“அமைதி இல்லாமல், மார்க்க அல்லது உலக விவகாரங்களில் நம்மால் சிறந்து விளங்க முடியாது”.

கிலா∴பத்தின் பண்புகளில் ஒன்று என்னவென்றால், அது அச்சத்தை அமைதியாக மாற்றுகிறது.

நபி (ஸல்) அவர்கள் மரணித்தபோது நபித் -தோழர்களின் நிலையை சற்று எண்ணிப் பாருங்கள்.

அவர்கள் மத்தியில் எப்போதும் இருந்த, அவர்கள் யாரிடம் திரும்பினார்களோ, அவர்களின் வேதனைகளைப் பகிர்ந்து கொண்ட, அவர்களின் கஷ்டங்களைத் தணித்த, அவர்களுக்கு தொழுகை நடத்திய, அவர்களை அன்புடன் வழிநடத்திய அந்த அச்சாணி திடீரென்று அவர்களுடன் இல்லாமல் போனார்கள். அது ஒரு பெரிய வெற்றிடத்தை உருவாக்கியது. நபித்தோழர்கள் முன்னெப்போதும் அனுபவித்திராத ஓர் அச்சத்தின் நிலையாக அது இருந்தது.

இது அல்லாஹ்வின் வாக்குறுதியாகவும், நிறைவேற்றப்பட வேண்டியதாகவும் இருந்தது. மேலும் தான் உருவாக்கிய ஒழுங்குமுறைக்கு கிலா∴பத் எப்படி உத்திரவாதமாக இருந்தது என்பதை நாம் காண்கிறோம்.

அவர்களில் ஒவ்வொருவரும், ஹஸ்ரத் அபூபக்ர், உமர், உஸ்மான், அலீ (ரலி) மற்றும் அனைத்து நபித்தோழர்களும் உலக விஷயங்களில் மட்டுமல்லாது, ஆன்மிகத்திலும் உயர்ந்தவர்களாகவும் உரமிக்கவர் -களாகவும் இருந்தனர்.

அரசாங்க அமைப்பு, பொது நிர்வாகம், பொருளாதார அமைப்பு, நீதித்துறை அமைப்பிலிருந்து பொதுப்பணித் துறைகள் வரை, மேலும் கட்டமைக்கப்பட்ட இராணுவ அமைப்பு வரை பரந்துபட்ட ஓர் ஒழுங்குமுறையை அவர்களால் நிலைநாட்ட முடிந்தது.


ஒவ்வொரு நுண்ணிய விவரமும் கவனத்தில் கொள்ளப்பட்டன. எடுத்துக்காட்டாக, பொருளாதார ஒழுங்குமுறையை எடுத்துக் கொண்டால், வாடிக்கையாளருக்கோ அல்லது பிற வியாபாரிகளுக்கோ சிரமம் ஏற்படாமல் தடுக்க, வியாபாரிகள் செயற்கையாக விலைகளை உயர்த்தவோ அல்லது குறைக்கவோ கூடாது என்பதை ஹஸ்ரத் உமர் அவர்கள் உறுதிப்படுத்தினார்கள். ஒருமுறை மதீனாவில் ஒரு வியாபாரி திராட்சையை விற்றுக் கொண்டிருந்தார். அதற்கு மற்றவர்களால் ஈடு கொடுக்க முடியவில்லை. அவ்வழியாக சென்று கொண்டிருந்த ஹஸ்ரத் உமர் அவர்கள், அவரின் தந்திரமான யுக்தியைக் கண்டித்தார்கள். ஒழுங்குமுறையின் ஒவ்வோர் அம்சத்தையும் கலீ∴பா தனிப்பட்ட முறையில் எவ்வாறு கவனித்துக் கொள்வார்கள் என்பதைக் காட்டினார்கள்.

அன்றைய குல∴பாயே ராஷிதீன் (நேர்வழி பெற்ற கலீ∴பாக்கள்) எவ்வாறு ஒழுங்குமுறையை நிலைநாட்டினார்கள் என்பதை வரலாறு பறைசாற்றுகிறது.

உலகை மீண்டும் இருள் சூழ்ந்தபோது, இக்காலத்தின் இமாம், ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் அல்லாஹ்வால் அனுப்பப்பட்டார்கள். அன்னாருக்குப் பிறகு கிலா∴பத் அலா மின்ஹாஜின் நுபுவ்வத் மீண்டும் நிறுவப்பட்டது.

கிலா∴பத்தே அஹ்மதிய்யாவின் 115 ஆண்டு கால வரலாறு, கிலா∴பத் மட்டுமே ஒழுங்குமுறைக்கு உத்திரவாதம் என்ற கூற்றை மீண்டும் நிரூபிக்கிறது.

ஒவ்வொரு கலீ∴பாவின் தொலைநோக்குப் பார்வையும் வழிகாட்டுதலும், உலகளவில் ஜமாஅத்தே அஹ்மதிய்யாவில் முன்னேற்றத்தை ஏற்படுத்தின. அது தனி மனித அளவிலானாலும் சரி அல்லது சர்வதேச அளவிலானாலும் சரி. கலீ∴பாவின் தனிப்பட்ட வழிகாட்டுதலே வெற்றியின் திறவுகோலாக இருந்துள்ளது.



ஆரம்பத்திலிருந்தே, தம் வசம் மிகக் குறைந்த வழிவகைகளே இருந்தாலும், ஹஸ்ரத் முதல் கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஓர் ஒழுங்குமுறையை ஏற்படுத்தி -னார்கள் மற்றும் ஜமாஅத்தை ஒருங்கிணைத்தார்கள். மேலும் தனிப்பட்ட முறையில் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு ஆன்மிகப் பயிற்சி அளித்தார்கள்.

அச்சத்தின் நிலை கிலா∴பத்தின் மூலம் அமைதியின் நிலையாக மாற்றப்பட்டது.




பின்னர் ஹஸ்ரத் இரண்டா -வது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களால், மிகக் குறுகிய காலத்தில் நிலைநாட்டப்பட்ட சிறப்புமிக்க ஒழுங்குமுறையால், ஜமாஅத்தின் ஒவ்வோர் அம்சமும் கவனத்தில் கொள்ளப்பட்டது. உலக நிறுவனங்களில் இத்தகைய அமைப்பை நிறுவ பல நூற்றாண்டு -கள் ஆகி இருக்கும். நிர்வாக அமைப்பு, துணை அமைப்புகள், பொருளாதார அமைப்பு, நீதி அமைப்பு மற்றும் பல்வேறு அமைப்புகள், அனைத்தும் ஒரு நோக்கத்துடன் மற்றும் ஒவ்வொன்றும் தன் அடித்தளத்தில் கலீ∴பாவின் வழிகாட்டுதலின் கீழ் அமைக்கப்பட்டன. இன்று நாம் இந்தத் திட்டங்கள் ஒவ்வொன்றிலும் தனி மனித அளவிலும் ஜமாஅத்தாகவும் தொடர்ந்து பயனடைந்து வருகிறோம். இவை அனைத்தும் கிலா∴பத்தால் மட்டுமே சாத்தியமானது. அதுவே வெற்றிக்கான உத்திரவாதம் ஆகும்.

அச்சத்தை அமைதியாக மாற்றும் நிகழ்வுகள் குறித்து மீண்டும் பார்ப்போம்.

ஒவ்வொரு கலீ∴பாவின் மரணத்தின் போதும் நாம் இதனைக் கண்டிருக்கிறோம். இதுவே ஜமாஅத்தின்

முடிவு என்று எதிரிகள் நினைத்து மகிழ்கிறார்கள். ஆயினும், மனித குலத்தின் இரட்சிப்புக்காக ஜமாஅத்தை நிறுவிய அல்லாஹ், ஜமாஅத்தை அடுத்த கலீபாவின் கரத்தின் கீழ் ஒன்றிணைத்து தனது மேன்மையைக் காட்டுகிறான்.

2003-ல் நாம் இதனைக் காணவில்லையா?



ஜமாஅத்தில் பல விருத்தியடையும் அமைப்புகளை ஏற்படுத்தியதன் பின், ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் 21 வெற்றி -கரமான ஆண்டுகளுக்குப் பிறகு, அன்னாரின் மறைவினால் ஜமாஅத் அதிர்ச்சியில் ஆழ்ந்தது.

Gressenhall சாலையின் இருளில், நமது அன்பிற்குரிய கலீ∴பாவின் முதல் வார்த்தைகளான 'அமருங்கள்' என்பது நம்மைச் சுற்றி எதிரொலிக்கும் வரை, நாங்கள் அமைதியாக, ஒரு சோகமான சூழலில், துஆவுடன் ஆனால் அச்ச நிலையில் காத்திருந்தோம்.

(அவ்வார்த்தையைக் கேட்டதும்), நாங்கள் நடைபாதைகளிலும் சாலைகளிலும் கீழ்ப்படிதலோடு தரையில் அமர்ந்தோம்.

யாரோ ஒருவர் சுவிட்சைப் போட்டது போல, எங்கள் அச்சம் உடனடியாக அமைதியாக மாறியது. ஒரு விதத்தில் இவ்வாறே நடந்தது. ஒளியின் மீது ஒளி இப்பொழுது இந்த கலீ∴பாவால் பாய்ச்சப்பட வேண்டி இருந்தது.




அன்று முதல் இன்று வரை, ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுஃல்லாஹ்...) அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் இந்த 20 ஆண்டுகளில் நாம் கண்ட முன்னேற்றம் மற்றும் வெற்றியின் வேகத்தை நீங்களே பாருங்கள்.

ஆயத்தே இஸ்திக்லா∴ப்பில் வாக்குறுதி அளிக்கப்பட்ட கிலா∴பத்தின் ஒவ்வோர் அம்சமும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

அவர்களுக்கு அவர்களின் மார்க்கத்தை உறுதிப்படுத்துதல்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விளக்கியது போல், மனிதனைத் தனது படைத்தவனுடன் மீண்டும் இணைக்க அன்னார் வந்துள்ளார்கள். நமது இமாம் முதல் நாளிலிருந்தே நம்முடைய கவனத்தை இதன் பக்கம் திருப்பினார்கள். 'துஆ செய்யுங்கள்; நிறைய துஆ செய்யுங்கள்' என்ற அன்னாரின் வார்த்தைகளே, அன்னாரது தூதுச்செய்தியின் அடித்தளமாக இருந்தது. கடந்த 20 வருடங்களில், இதுவே ஒவ்வொரு மட்டத்திலும் தூதுச் செய்தியாக இருந்து வருகிறது. ஜமாஅத்தின் அமைதியும் வளமையும் அல்லாஹ்வுடனான இந்த பிணைப்பைப் பொறுத்ததே ஆகும். நம்முடைய இமாம் தொடர்ந்து நம்மை இந்த திசையிலேயே வழிநடத்தி வருகிறார்கள்.

உலகெங்கிலும் பள்ளிவாசல்களைக் கட்டுவதில் முன்னேற்றம் ஏற்படுத்துவதும், அதில் தொழுகையாளி -களைக் கொண்டு நிரப்புவதும், அல்லாஹ்வை அழைக்கும் மனிதர்களைத் தயார் செய்வதற்காக உலகின் பல்வேறு பகுதிகளில் ஜாமிஆக்களை நிறுவுவதும் ஆகிய இப்பணிகளை ஹஸ்ரத் அமீருல் மு∴மினீன் (அய்யதஹுஃல்லாஹ்...) அவர்கள் தனிப்பட்ட முறையில் அவர்களின் பயிற்சியை கண்காணிக் -கின்றார்கள். அவர்கள் அன்னாருடன் இஸ்லாமாபாத்தில் பல மாதங்கள் செலவிடுகிறார்கள், அங்கு அன்னார் இந்த கடினமான வைரங்களைப் பட்டை தீட்டுகிறார்கள்.




இந்தச் செய்தியை பூமியின் மூலை முடுக்கெல்லாம் கொண்டு செல்வதற்கான எல்லா வழிகளையும் பயன்படுத்துவதும், ஒரு MTA சேனலில் இருந்து எட்டு சேனலாக, பன்மொழித் திறன் கொண்டவையாக மாற்றியதும், ஆகிய கலீ∴பாவின் அத்துனை முயற்சிகளும் அல்லாஹ்வுடன் நமக்கு தனிப்பட்ட தொடர்பை ஏற்படுத்துவது என்ற ஒரே ஒரு நோக்கத்துடன் மட்டுமே இயக்கப்படுகின்றன.

நிச்சயமாக, இந்த முயற்சிகள் சர்வதேச அளவில் உள்ளன. ஆனால் நம்முடைய இமாம் உண்மையிலேயே தம்முடைய எண்ணங்களில் நம் ஒவ்வொருவரையும்

தனிப்பட்ட முறையில் கருத்தில் கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

ஆம்; உறங்குவதற்குமுன், ஒவ்வொரு ஜமாத்துக்கும் தம்முடைய மனதிற்குள் பயணித்து, நமக்காக பிரார்த்தனை செய்கிறார்கள். சமீபத்தில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு...) அவர்கள் ஒரு சந்திப்பில் இவ்வாறு விளக்கினார்கள்: நம்முடைய இரவு அமைதியானதாக இருக்க வேண்டும் என்று துஆ செய்கிறார்கள். நாம் தொழுவதற்கு அதிகாலையில் எழ வேண்டும் என்று துஆ செய்கிறார்கள். இதன் மூலம் அன்னார் நமது உடல் மற்றும் ஆன்மீக நலனைக் கருத்தில் கொண்டுள்ளார்கள். தம்முடைய ஓய்வைப் பற்றி கவலை கொள்ளாமல், எந்நேரமும் நமக்காக, நம்முடைய முன்னேற்றத்திற்காக சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களே பூமியில் இறைவனின் பிரதிநிதி ஆவார்கள். அவர்கள் நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் ஒழுங்குமுறைக்கு உத்திரவாதம் அளிக்கிறார்கள்.

அவர்களின் அச்சத்திற்குப் பிறகு அவர்களுக்குப் பாதுகாப்பையும் அமைதியையும் கொடுப்பது.

கடந்த 20 ஆண்டுகளில் இந்த உலகம் பெரும் குழப்பத்தைக் கண்டுள்ளது. ஒரு மனிதர் மட்டும் தனித்து நின்று அமைதியை நிலைநாட்டும் தூதுச் செய்தியை உலகம் முழுவதும் எடுத்துச் சென்றார்.

உலகம் அமைதியில் இருக்கவில்லை. ஐ.நா, நேட்டோ, ஐரோப்பிய ஒன்றியம், அரபு லீக் போன்ற மனிதனால் உருவாக்கப்பட்ட அமைப்புகள் அனைத்தும் உலக அமைதியை நிலை நாட்டுவதில் மனிதகுலத்தை தோல்வியுறச் செய்தன.

நமது அன்பிற்குரிய இமாம் அவர்கள், அதிகார மையத்தின் வெவ்வேறு இடங்களில் தம்முடைய எண்ணற்ற உரையாடல்களின் மூலம், அவர்களின் பொறுப்பு-களை அவர்களுக்கு நினைவூட்டுகிறார்கள். அதே நேரத்தில், அமைதியின் ஒரே உத்திரவாதமான எல்லாம் வல்ல இறைவனுடன் இணைவதற்கு அவர்களை அறிவுறுத்துகிறார்கள்.

தம்மால் செல்ல முடியாத இடங்களுக்கு, அரசியல் மற்றும் ஆன்மிக உலகத் தலைவர்களுக்கு அன்னார் எழுதிய கடிதங்கள், அதே செய்தியை எட்ட வைக்கும் வேலையைச் செய்தன.

ஹுஸூருடைய முந்தைய எச்சரிக்கைகள் அவர்களால் இப்போது உணரப்பட்டதால், முன்னர் அவர்கள் காட்டிய நம்பிக்கையின்மைக்குப் பதிலாக, அவ்விடத்தில் இப்போது நம்பிக்கையும் அக்கறையும் உள்ளன.

இந்த நிறுவனங்களின் அலுவலர்களும், உலகெங்கிலும் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும், கொள்கை வகுப்பாளர்களும், உலகின் பல்வேறு பகுதிகளின் அமைதிக்கு உத்திரவாதம் அளிக்கும் மாற்றங்களை எவ்வாறு கொண்டு வருவது என்பது குறித்து தனிப்பட்ட முறையில் ஹஸ்ரத் கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களிடம் வழிகாட்டுதலை வேண்டி விரைகின்றனர்.

இதுவே அரசியல் அதிகாரத்தைப் பற்றி கவலைப்படாத, முழு மனித குலத்தின் மீதும் அக்கறை கொண்டஉண்மையான கிலா∴பத் ஆகும்.

இஸ்லாத்திற்கு எதிரான அட்டூழியங்களின் விஷயத்திலும் இதே நிலைதான் உள்ளது. அது குர்ஆன் எரிப்பு சம்பவங்களாக இருந்தாலும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கேலிச் சித்திரங்கள் வெளியீடாக இருந்தாலும் அல்லது சார்லி ஹெப்டோ போன்ற நிகழ்வுகளுக்கு எதிரான முஸ்லிம்களின் கொடிய அவசர எதிர்வினைகளாக இருந்தாலும் சரி. ஹஸ்ரத் அமீருல் மு∴மினீன் அவர்களே அமைதியை ஊக்குவிப்பவர்களாக இருக்கிறார்கள். அன்னார் தம்முடைய வெள்ளிக்கிழமை குத்பாக்கள் மற்றும் சொற்பொழிவுகள் மூலம் உண்மையான இஸ்லாமிய பதிலை அளித்து அமைதி மற்றும் சகிப்புத்தன்மையைப் போதித்து வருகின்றார்கள்.

(தொடரும் )



# காதியானும் அதன் புனித, வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களும்

தொகுப்பு: மவ்லானா முஹம்மது ஹமீது கவ்ஸர்
(அஹ்மதிய்யத் வரலாற்றுத் துறையின் பொறுப்பாளர், காதியான்)

8

தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.

## புனிதமான அறையில் கூட்டு துஆ

ஹஸ்ரத் சய்யிதுனா அல் முஸ்லிஹுல் மவ்வூது (ரலி) அவர்கள் தாக்கத்தை உருவாக்கும் இந்த சொற்பொழிவுக்குப் பிறகு, (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலைஹிஸ் ஸலாம் அவர்கள்) 40 நாட்கள் தியானத்தில் இருந்த புனிதமான அருளிக்குரிய அறைக்குச் சென்றார்கள். அது அந்நாட்களில் ஒரு கண்ணியத்திற்குரிய இந்து சேட் ஹரிகிருஷ்ணன்தாஸ் என்பவரின் சொத்தில் இருந்தது. (சேட் ஹரிகிருஷ்ணன்தாஸ் ஆகிய) அவர் அதை ஷேக் மெஹர் அலீ சாஹிப் என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கி அதில் ஒரு வீட்டைக் கட்டி அதன் மேல் தளத்தில் பச்சை நிறத்தைப் பூசியிருந்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 40 நாட்கள் தியானத்தில் இருந்த அந்த மேல் தளம் தனது அசல் வடிவில் இருக்கவில்லை. ஆனால் அந்த சந்தர்ப்பத்தி-லேயே அதே அடிப்படை-களிலேயே ஓர் அறை கட்டப்பட்டதாக இருந்தது. அங்கு (ஹரிகிருஷ்ணன்தாஸ் என்ற) சேட் சாஹிப் மிகவும் மகிழ்ச்சியுடன் துஆ செய்-வதற்கு அனுமதி அளித்தார்-கள். இன்னும் கூறுவதென்றால், ஹஸ்ரத் மிர்ஸா (பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது ரலியல்லாஹு அன்ஹு) சாஹிப் அவர்கள் இங்கு வந்தால் அது எனது பெரும் நற்பேறு ஆகும் என்று நாஸிர் த.்.வதோ தப்லீக் ஆக இருந்த ஹஸ்ரத் மவ்லவி அப்துல் முக்னீ கான் சாஹிப் அவர்கள் மூலமாக (சேட் ஹரிகிருஷ்ணன் தாஸ் சாஹிப் ஆகிய) அவர் விருப்பத்தை வெளிப்படுத்தினார். அதன்படி, ஹுஸூர் (ரலி) அவர்கள் வீட்டுக்குச் சென்றபோது சேட் சாஹிப் மற்றும் அவர்களின் குடும்பத்தினர், மற்ற நபர்கள் மிகவும் மதிப்புடனும் மரியாதையுடனும் வரவேற்றனர். அறையின் இன்னொரு மூலையில் அமைந்திருந்த ஒரு பெரிய அலங்கரிக்கப்பட்ட அறையில் ஹுஸூர் (ரலி) அவர்களை அமர வைத்தார். மேலும் ஹுஸூர் (ரலி) அவர்களுக்கு பழங்களைக் கொடுத்தார். மேலும் தனது குடும்பத்தினர்களை அறிமுகம் செய்து வைத்தார். இதற்குப் பிறகு ஹுஸூர் (ரலி) அவர்கள் புனிதமான அறைக்கு சென்றார்கள். கிப்லாவை நோக்கி முகந்திருப்பியவாறு இரண்டு முழங்காலையும் மடக்கி வைத்துவாறு அமர்ந்து தஸ்பீஹ் செய்யவும், (அல்லாஹ்வின் தூய்மையை எடுத்துரைக்கவும்) தஹ்மீது செய்யவும், (அல்லாஹ்வைப் புகழ்ந்துரைக்கவும்) துவங்கினார்கள். அந்த அறையில் அந்த நேரத்திற்காக தரைக்கான ஏற்பாடு ஜமாஅத் சார்பாக செய்யப்பட்டிருந்தது.




இடப்பற்றாக்குறையின் காரணமாக ஹஸ்ரத் அமீருல் மு.்.மினீன் அல்முஸ்லிஹுல் மவ்வூது (ரலி) அவர்கள் மட்டுமின்றி, கீழ்வரும் 35 சகோதரர்கள் அறையில் நுழைந்தனர். அவர்களை ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் ஒவ்வொருவராக ஒழுங்கான வரிசையில் உள்ளே அனுப்பினார்கள்:

1. ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா ஷரீ.்.ப் அஹ்மது சாஹிப் (ரலி)
2. ஹஸ்ரத் சாஹிப்ஸாதா ஹா.்.பிஸ் மிர்ஸா நாஸிர் அஹ்மது சாஹிப் (ரலி)
3. ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா முனவ்வர் அஹ்மது சாஹிப் (ரலி)
4. ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா கலீல் அஹ்மது சாஹிப் (ரலி)
5. சாஹிப்ஸாதா மிர்ஸா ஹ.்.பீஸ் அஹ்மது சாஹிப் (ரலி)
6. சாஹிப்ஸாதா மிர்ஸா ர.்.பீ.்.அஹ்மது சாஹிப்
7. சாஹிப்ஸாதா மிர்ஸா வஸீம் அஹ்மது சாஹிப்
8. சாஹிப்ஸாதா மிர்ஸா ஹமீது அஹ்மது சாஹிப்
9. சாஹிப்ஸாதா மிர்ஸா முபஷ்ஷிர் அஹ்மது சாஹிப்
10. சாஹிப்ஸாதா மிர்ஸா மஜீது அஹ்மது சாஹிப்
11. சாஹிப்ஸாதா மிர்ஸா மன்ஸூர் அஹ்மது சாஹிப்
12. ஹஸ்ரத் கான் முஹம்மது அப்துல்லாஹ் கான் சாஹிப் (ரலி)
13. சாஹிப்ஸாதா மிர்ஸா மஸ்வூது அஹ்மது கான் சாஹிப் (ரலி)
14. சாஹிப்ஸாதா அப்பாஸ் அஹ்மது கான் சாஹிப்
15. ஹஸ்ரத் மவ்லானா ஷேர் அலீ சாஹிப் (ரலி)
16. ஹஸ்ரத் மவ்லானா சய்யிது சர்வர் ஷாஹ் சாஹிப் (ரலி)
17. ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்ஹாக் சாஹிப் (ரலி)
18. ஹஸ்ரத் ஹா.்.பிஸ் முஹம்மது இப்ராஹீம் சாஹிப் (ரலி)

19. ஷாஹ் ஜஹான்பூரைச் சேர்ந்த ஹஸ்ரத் ஹா∴பிஸ் முக்தார் அஹ்மது சாஹிப்
20. ஷாஜஹான்பூரி ராஜீக்கியைச் சேர்ந்த ஹஸ்ரத் மவ்லவி குலாம் ரஸுல் சாஹிப் (ரலி)
21. ஹஸ்ரத் மவ்லவி அப்துர் ரஹீம் சாஹிப் (ரலி)
22. ஜனாப் ஷேக் பஷீர் அஹ்மது வழக்கறிஞர், லாஹுர்
23. ஹஸ்ரத் டாக்டர் ஹஷ்மதுல்லாஹ் சாஹிப் (ரலி)
24. மவ்லவி அப்துல் மன்னான் உமர் சாஹிப் M.A.
25. ஹஸ்ரத் சவ்த்ரி ∴பதஹ் முஹம்மது சாஹிப் M.A.
26. ஹஸ்ரத் மவ்லவி அப்துல் முக்னீ கான் சாஹிப் (ரலி)
27. ஹஸ்ரத் கான் சாஹிப் மவ்லவி ∴பர்ஸந்து அலீ சாஹிப் (ரலி)
28. ஹஸ்ரத் டாக்டர் சய்யிது குலாம் கவ்ஸ் ஷாஹ் சாஹிப் (ரலி) காதியான்
29. சியால்கோட்டைச் சேர்ந்த மியான் ∴பெரோஸ் தீன் சாஹிப்
30. ஹஸ்ரத் ஹா∴பிஸ் நூர் முஹம்மது சாஹிப் (ரலி) ∴பைஸுல்லாஹ் செக்
31. ஹஸ்ரத் ஷேக் அப்துர் ரஹ்மான் சாஹிப் (ரலி)
32. ஹஸ்ரத் முன்ஷி முஹம்மதுத் தீன் சாஹிப் காரியான் (ரலி)
33. ஹஸ்ரத் மவ்லவி அப்துர் ரஹ்மான் சாஹிப் ஜட் (ரலி)
34. ஜனாப் சூ∴பீ அப்துல் கதீர் சாஹிப் நியாஸ் B.A.

இந்த சகோதரர்களுடன் 35-ஆவது நபர் ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்களும் அறையில் இருந்தார்கள்.

அல்லாஹ்வின் அருளாலும், பேருதவியாலும் துஆ செய்யும் இந்த அறையும் கட்டடத்தின் பாதி பகுதியும் காதியானின் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவிற்கு சொந்தமாக இருக்கிறது. இன்றைய நாட்களில் இந்த அறை மஸ்ஜிதாக பயன்படுத்தப்படுகிறது. சகோதரர்கள் பெருமளவில் துஆவுக்காக வருகை தருகின்றனர்.

### லூதியானாவிலுள்ள தாருல் பைஅத்

சய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்த∴பா (ஸல்) அவர்கள் முஹம்மதிய்ய உம்மத்தில் வரக் கூடிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றி இவ்வாறு முன்னறிவித்திருந்தார்கள்:

فَيَطْلُبُهُ حَتّٰى يُدْرِكَهُ بِبَابِ لُدٍّ فَيَقْتُلَهُ

(∴பயத்லுபுஹூ ஹத்தா யுத்ரிகஹூ பிபாபி லுத்தின் ∴பயக்துலஹூ)

பொருள்: (வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலைஹிஸ் ஸலாம் ஆகிய) அவர் தஜ்ஜாலைத் துரத்திப் பிடிப்பார். மேலும் அவனை (சான்றுகள், துஆக்கள் மூலமாக) கொன்று விடுவார். (மிஷ்காத், கிதாபுல் ∴பிதன்)

பஞ்சாப் மாநிலத்தில் கிறித்தவத்தின் துவக்கம் எப்படி ஏற்பட்டதென்றால், அமெரிக்காவிலிருந்து இரண்டு கிறித்தவ கொள்கை பரப்புநர்கள் 15, அக்டோபர் 1833 அன்று கொல்கத்தா வந்தடைந்தனர். மேலும் கவர்னர் ஜெனரல் லார்டு வில்லியம் பென்டிங் (Lord William Bentinck) என்பவரின் விருப்பத்திற்கு ஏற்ப, ஆங்கிலேய அரசாங்கத்தின் எல்லைப் பகுதியில் ஒரு கிறித்தவ மிஷன் நிறுவப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, பாதிரி J.C. லோரி என்பவர் 5, நவம்பர் 1834 அன்று லூதியானா வந்தடைந்தார். மேலும் பிரித்தானிய அதிகாரி அவருக்கு அங்கு கிறித்தவ மிஷனை உருவாக்குவதற்கு எல்லா வகையான சலுகைகளையும் வழங்கினார்; நிலத்தை வழங்கினார். இவ்வாறு பஞ்சாப் மாநிலத்தில் முதல் கிறித்தவ தேவாலயம் லூதியானா என்ற இடத்தில் 1837-ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அல்லாஹ்வின் அற்புதமான நியதி என்னவெனில், அவன் அதே லூதியானா நகரத்திலேயே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக ஹிஜ்ரி 1309-ஆம் ஆண்டு ரஜப் 20 ஆம் நாள் அதாவது 23, மார்ச் 1889 அன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அடிக்கல்லை நாட்டி, தஜ்ஜாலைக் கொல்லு -வதற்கான திட்டத்தை துவங்கினார்கள். மேலும் (லூதியானா என்ற) இந்த நகரத்தின் துவக்க எழுத்துகளும் 'லுத்' என்பதேயாகும். எந்த ஜமாஅத்தின் அடிக்கல் லூதியானாவில் வைக்கப்பட்டதோ அதுவே முழு உலகிலும் பரவி தஜ்ஜாலை அழித்தொழித்துக் கொண்டிருக்கிறது.

எந்த அறையில் ஹஸ்ரத் வாக்களிக்கபட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முதன் முதலில் மவ்லானா நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்களிடம் பைஅத் வாங்கி, ஜமாஅத்தை நிலைநாட்டினார்களோ அது 'தாருல் பைஅத்' என்று அழைக்கப்படுகிறது. இது ஹஸ்ரத் வாக்களிக்கபட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் மிகவும் அன்பு கொண்டிருந்த ஹஸ்ரத் சூ∴பி அஹ்மது ஜான் சாஹிப் (ரலி) அவர்களின் வீடு ஆகும். ஆனால் இவர்கள் ஜமாஅத் நிலைநாட்டப்படுவதற்கு முன்பே மரணித்து விட்டார்கள். இவர்களின் மகளை ஹஸ்ரத் முதல் கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் திருமணம் செய்திருந்தார்கள். இந்த வீட்டை ஹஸ்ரத் சூ∴பி அஹ்மது ஜான் சாஹிப் (ரலி) அவர்களின் மகன்கள் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் பெயரில் அன்பளிப்பாக வழங்கி விட்டார்கள். சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா இதற்கான ஏற்பாட்டை உள்ளூர் ஜமாஅத்திடம் ஒப்படைத்து விட்டது.

1916-ஆம் ஆண்டு இதன் முதல் வடிவம் கொஞ்சம் மாற்றப்பட்டு வடக்கு திசையில் ஒரு நீண்ட, உறுதியான, காற்றோட்டமுள்ள அறை ஆயத்தம் செய்யப்பட்டது. அதன்




தாருல் பைஅத்
லூதியானா

வடக்கு திசையிலுள்ள சுவற்றின் வெளிப்புறத்தில் தாருல் பைஅத் என்ற பெயரும், பைஅத் வாங்கப்பட்ட தேதியும் அடங்கிய சொற்களைக் கொண்ட எழுத்துகள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் முற்றத்தில் சுட்ட செங்களாலான சுமார் ஒரு ஜாண் (அதாவது ஒன்பது அங்குலம்) அளவிலான உயர்ந்த மாடியும், ஒரு மிஹ்ராபும் (தொழ வைப்பதற்கான இடமும்) உருவாக்கப்பட்டு தொழுகைக்காக ஒதுக்கப்பட்டு விட்டது. டிசம்பர் 1939-ல் தொழும் இடத்தில் ஒரு சிறிய அழகான மஸ்ஜிது கட்டப்பட்டது. மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டன. முற்றத்தில் தண்ணீர் அடிக்கும் குழாய் பொருத்தப்பட்டது. குளியலறை, கழிவறை ஆயத்தம் செய்யப்பட்டது. ஒரு நீண்ட அறையை இரண்டாகப் பிரித்து கிழக்கு அறையில் அஹ்மதிய்யா நூலகம் நிலைநாட்டப்பட்டது. அந்த அறையின் கிழக்கிலுள்ள சுவற்றின் தெற்கு மூலையின் ஓரத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அமர்ந்து பைஅத் வாங்கிய, ஜமாஅத்தை நிலைநாட்டிய அந்த புனிதமான இடம் ஆகும். (தாரீகே அஹ்மதிய்யத் - அஹ்மதிய்யத்தின் வரலாறு தொகுதி 1 பக்கம் 380)


தாருல் பைஅத்தின் கட்டடம் எப்போதும் காதியான் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் சொத்தில் இருந்ததென்றாலும், 1947-ஆம் ஆண்டு இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர் இதில் முஸ்லிம் அல்லாத ஒருவர் வாடகைக்கு இருந்து வந்தார். அவர் இதில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. இறுதியில் இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க இடம் அவரிடமிருந்து காலி செய்யப்பட்டது. மேலும் 15, பிப்ரவரி 2006 அன்றிலிருந்து அது ஜமாஅத்தின் நபர்களுக்காக திறக்கப்பட்டு விட்டது.

லூதியானாவிலுள்ள தாருல் பைஅத்தின் பழைய வரைபடம்




ஹஸ்ரத் சூஃபி அஹ்மது ஜான் சாஹிப் (ரலி) அவர்களின் வீடு

லூதியானாவிலுள்ள தாருல் பைஅத்தின் புதிய வரைபடம்




وَوَسِّعْ مَكَانَكَ (வவஸ்ஸி∴ மகானக)

'உமது வீட்டை விரிவுபடுத்துவீராக' என்ற இல்ஹாம்

அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இல்ஹாம் மூலமாக, وَوَسِّعْ مَكَانَكَ (வவஸ்ஸி∴ மகானக - அதாவது உமது வீட்டை விரிவுபடுத்துவீராக) என்று கூறினான். சன்னோரைச் சேர்ந்த ஹஸ்ரத் அப்துல்லாஹ் சாஹிப் (ரலி) கூறுவதாவது, ஹுஸுர் (அலை) அவர்களுக்கு وَوَسِّعْ مَكَانَكَ (வவஸ்ஸி∴ மகானக - அதாவது உமது வீட்டை விரிவுபடுத்துவீராக என்ற இல்ஹாம் இறங்கிய போது ஹுஸுர் (அலை) அவர்கள் என்னிடம், வீடுகளைக் கட்டுவதற்கு நம்மிடம் பணம் இல்லையே! இந்தக் கட்டளையை நிறைவேற்றுவதற்காக இரண்டு மூன்று குடிசைகளை உருவாக்கி விடுவோம் என்று கூறினார்கள். அதன்படி, இந்த வேலைக்காக ஹுஸுர் (அலை) அவர்கள் என்னை அமிர்தசரஸிலுள்ள தமது பழைய நண்பரும், ஹுஸுர் (அலை) அவர்கள் அமிர்தசரஸில் தாம் அதிகமாக தங்கி வந்த ஹக்கீம் முஹம்மது ஷரீ∴ப் சாஹிப் அவர்களிடம், நான் அவர்களின் மூலமாக குடிசை வீடு கட்டுபவர்களையும், குடிசை கட்டுவதற்குத் தேவையான பொருள்களையும் வாங்கி வருவதற்காக அனுப்பினார்கள். அதன்படி, நான் சென்று ஹக்கீம் சாஹிப் மூலமாக அமிர்தசரஸிலிருந்து குடிசை

கட்டும் மனிதரையும் குடிசை கட்டுவதற்கான பொருள்களையும் வாங்கி வந்தேன். ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் தமது வீட்டில் மூன்று குடிசைகளைக் கட்டினார்கள். (சீரத்துல் மஹ்தி தொகுதி 1 பக்கம் 131 அறிவிப்பு எண்: 141)

இறைவனின் இந்தக் கட்டளையை நிறைவேற்றும் தொடர் மூன்று குடிசைகளை உருவாக்குவதன் மூலமாக துவங்கியது. அதற்குப் பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் அவர்களின் கலீ∴பாக்களின் ஒவ்வொருவரின் அருளுக்குரிய காலத்திலும் இறை கட்டளைக்கேற்ப தாருல் மஸீஹிலும், காதியானிலுள்ள வீடுகளிலும் விரிவாக்கம் செய்வது தொடர்ந்து நடைபெற்று வந்தது. எதுவரையெனில், இந்தியா, பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு வசதிகள் குறைவாக இருந்தாலும் கொஞ்சம் ஓரளவுக்கு விரிவாக்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் காலத்தில் விரிவாக்கம் செய்யும் ஒரு புதிய காலகட்டம் துவங்கி விட்டது. மேலும் காதியானில் மிக அதிகமான புதிய கட்டடங்கள் கட்டப்பட்டன.

இந்த இறை கட்டளையின் நவீன காலகட்டம் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் அருளுக்குரிய காலத்தில் புதிதாக துவங்கியது. அது இப்போது வரை தொடர்கிறது. 2013 மற்றும் 2014 ஆண்டுகளில் எந்த புனிதமான வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள் Renovation (புதுப்பித்தல் பணி) அதாவது கட்டடத்தில் பழுதடைந்தவற்றை சீர்மைப்பது, சரி செய்வது, அழகுபடுத்துவது ஆகியவை நடைபெற்றனவோ அல்லது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவோ அவற்றின் விபரம் கீழே தரப்படுகின்றன:

முபாரக் மஸ்ஜிது, சிவப்பு மைத்துளி அடையாளம் வெளிப்பட்ட அறை, பைத்துல் ∴பிக்ர், தாருல் மஸீஹின் எல்லா பகுதிகள், மர்ஹூம் மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிப் அவர்களின் வீடுகள், ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா சுல்தான் அஹ்மது சாஹிப், ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா அஸீஸ் அஹ்மது சாஹிப் (ரலி), ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா ரஷீது அஹ்மது சாஹிப் (ரலி), ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் சாஹிப் (ரலி), ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி), மர்ஹூமா ஹஸ்ரத் உம்மே தாஹிர் சாஹிபா, கஸ்ரே கிலா∴பத் பழையது மற்றும் புதியது, மஸ்ஜிது அக்ஸா, குல்ஷனே அஹ்மது. இவை மட்டுமின்றி, அக்ஸா மஸ்ஜிதுக்கு செல்லும் வழியிலும் தாருல் மஸீஹின் வீதிகளிலும் Tiles போடப்பட்டுள்ளன. முபாரக் மஸ்ஜிதுக்கு கிழக்குத் திசையில் பழைய இரும்பு வாசல் கதவு (Gate) இருந்த இடத்தில் புதிய இரும்பு வாசல் (Gate) பொருத்தப்-பட்டுள்ளது. இரும்பு வாசல் கதவின் சுவற்றின் தெற்கு திசையில் இன்னொரு (Gate) (வாசல்) உருவாக்-கப்பட்டுள்ளது. த∴லீமுல் இஸ்லாம் ஹைஸ்கூலின் கட்டடத்தில் சாதாரணமான சீரமைப்புகள் செய்து அது அழகாக ஆக்கப்பட்டுள்ளது. அஹ்மதிய்யா மத்ரஸாவின் பழைய கட்டடம் நீண்ட காலம் கடந்ததன் காரணமாக பயன்படுத்தத் தகுதியில்லாததாக ஆகி விட்டதனால் அது இடிக்கப்பட்டு விட்டது.



ஷஆயிருல்லாஹ் (எனும் அல்லாஹ்வின் அடையாளங்-கள்) என்பதில் மிக முக்கியமான ஓர் இறை அடையாளம் காதியானிலுள்ள ‘பெஹிஷ்தி மக்பரா’ ஆகும். அதைச் சுற்றியுள்ள நான்கு சுவர்கள் இன்னும் அதிகமாக உயர்த்தப்பட்டுள்ளன. மேலும் அதன் மீது முள் வேலி போடப்பட்டுள்ளது. ‘பெஹஷ்தி மக்பரா’-வின் பழைய இரும்பு வாசல் கதவு மாற்றப்பட்டு ஒரு பெரிய இரும்பு (Gate) (வாசல்) பொருத்தப்பட்டுள்ளது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மண்ணறையும், ஹஸ்ரத் முதல் கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மண்ணறையும் இஸ்லாமிய முறைப்படி, உலராத மண்ணால் உருவாக்கப்-பட்டிருந்தது. இப்போதும் அது அவ்வாறே இருக்கிறது. மேலும் அதைச் சுற்றி செங்கலாலும், சிமெண்டாலும் உயர்த்திக் கட்டப்பட்டிருந்தது. இப்போது அந்த செங்கல்களில் பளிங்குக் கல் பொருத்தப்பட்டுள்ளது.


பெஹிஷ்தி மக்பராவின் உட்புறத்திலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வீடு புதுப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் அது அழகாக்கப்பட்டுள்ளது; அலங்கரிக்கப்-பட்டுள்ளது. பெஹிஷ்தி மக்பராவின் கிழக்கு திசையில் குளத்திற்கு ஓரத்தில் ஓர் அழகிய தோட்டம் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. وَسِّعْ مَكَانَكَ (வஸ்ஸி∴ மகானக - உமது வீட்டை விரிவுபடுத்துவீராக) என்பதன் கீழ் இந்த அனைத்து கட்டடப் பணிகளும் ஹஸ்ரத் அமீருல் மு∴மினீன் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்-லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் கட்டளைகளுக்கும், வழிகாட்டல்களுக்கும் ஏற்ப தனது முழுமையை அடையட்டுமாக. அவ்வாறே ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் கட்டளைகளுக்கும், வழிகாட்டல்களுக்கும் ஏற்ப சரியான முறையில் கட்டடப் பணிகளைக் கண்காணிக்கும் கடமையை (இந்தியா, நேபாளம், பூட்டான் ஆகியவற்றின்) வக்கீல் த∴மீலோ தன்∴பீஸ் ஆகிய மதிப்பிற்குரிய ∴பாதிஹ் அஹ்மது சாஹிப் நிறைவேற்றி வருகின்றார்கள். فَجَزَاهُمُ اللهُ اَحْسَنَ الْجَزَاءِ (∴பஜஸாஹுமுல்லாஹு அஹ்ஸனல் ஜஸா - அல்லாஹ் அவர்களுக்கு அழகிய நற்பலனை வழங்குவானாக).

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்:

“காதியான் ஓர் உண்மையாளரின் இடமாகும் என்று சூரியனைப் போன்று ஒளிவீசிப் பறைசாற்றும் நாள் வரவிருக்கிறது.”

காதியானின் புனிதமான இடங்களும், வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களும் ஆன்மிகமான முறையிலும், மார்க்கமான முறையிலும் ஒளிவீசுவது மட்டுமின்றி, அதன் வெளிப்படையான ஒளிவீசுவதும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சொற்களின் உண்மைக்கு மிகத் தெளிவான சான்றாகும். اَلْحَمْدُ لِلّٰهِ عَلٰى ذٰلِكَ (அல்ஹம்து லில்லாஹி அலா ஸாலிக் - அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்).

(தொடரும்...)



# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

22

- மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி) -

தமிழாக்கம்: S.S.H. முஹம்மது லெப்பை

அவ்வப்போது அவர்கள் பதிலளிக்க வேண்டிய பல்வேறு கேள்விகளைப் பெற்று வந்தார்கள். ஒரு சமயம் அப்துல்லாஹ் ஜேம்ஸ் என்னும் கிறித்தவர் எழுப்பிய சில ஆட்சேபணைகளை அஞ்சுமன் ஹிமாயத்தே இஸ்லாம் எனும் அமைப்பு வெளியிட்டிருந்தது. தாம் எழுதும் பதில்களை அஞ்சுமன் வெளியிடுமா என்ற உறுதி அவர்களுக்கு இல்லாமல் இருந்தது. ஏனென்றால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் முன்னர் அனுப்பியிருந்த ஓர் அறிக்கையை அஞ்சுமன் வெளியிடவில்லை. இருந்தபோதிலும் இஸ்லாத்தின் மீது அவர்களுக்கு இருந்த ஆழமான பற்றின் காரணமாக, அவர்கள் தமது உடல் பலவீனத்தையும் பொருட்படுத்தாமல் அந்த ஆட்சேபணைகளுக்கு பதில் எழுதினார்கள்.

அந்தக் கேள்விகள், அவற்றிற்கு வழங்கப்பட்ட பதில்கள் ஆகியவற்றின் சாராம்சம் இங்கே தரப்படுகின்றது.
1. திருக்குர்ஆனின் ஆல இம்ரானின் 61–ஆவது வசனமாகிய 'எனவே நீர் ஐயம் கொள்பவர்களைச் சார்ந்தவராக வேண்டாம்' என்பதும் அல் பகரா, அல் அன்ஆம் ஆகிய அதிகாரங்களிலுள்ள வசனங்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது பணியின் மீது ஐயம் கொண்டவராக இருந்தார்கள் என்பதைக் காட்டுகிறது. எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஓர் உண்மையான இறைதூதராக இருக்க முடியாது.

இதற்கு பதில் கூறும் விதமாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இந்த வசனங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைக் குறித்துக் கூறப்பட்டவை அல்ல என்பதை எடுத்துக் கூறினார்கள். இந்த இரு வசனங்களின் பொருளை விளக்கிக் கூறிய பின், எம் பெருமானார் (ஸல்) அவர்கள் தம்முடைய நிலை பற்றி முற்றிலும் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார்கள் என்பதைக் காட்டும் பிற வசனங்களை எடுத்துக் காட்டினார்கள். அன்னாரின் நிலை பற்றி திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

"நீர் (அவர்களிடம்) கூறுவீராக! நான் என் இறைவன் புறமிருந்துள்ள தெளிவான சான்றில் (நிலை கொண்டு) உள்ளேன்." (6:58)

"அல்லாஹ் உம்மிடத்து வேதத்தையும் ஞானத்தையும் இறக்கி, நீர் அறியாதவற்றை உமக்குக் கற்றுக் கொடுத்தான். அல்லாஹ்வின் (மா)பெரும்) அருள் உம்மிடத்து உள்ளது." (4:114)

"நீர் கூறுவீராக: இதுவே எனது வழி. நான் அல்லாஹ்வின் பக்கம் அழைக்கின்றேன். நானும் என்னைப் பின்பற்றியோரும் தெளிவான ஞானத்தில் இருக்கின்றோம்." (12:109)

"அந்த உள்ளம் தான் கண்டதைக் குறித்துப் பொய்யுரைக்கவில்லை." (53:12)

"அவரது கண் விலகி விடவுமில்லை. (அது கடந்து விடவும் இல்லை.) நிச்சயமாக அவர் தமது இறைவனின் அடையாளங்களுள் மிகவும் வலிமை வாய்ந்ததையே கண்டார்." (53:18,19)

இவ்வாறு இந்த வசனங்களின் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சந்தேகத்தில் இருந்தார்கள் என்ற கூற்றுக்கு சாதகமாக திருக்குர்ஆனில் எதுவுமில்லை என்பதை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் விளக்கினார்கள். அதே நேரத்தில் இயேசு சந்தேகத்திற்கு ஆட்பட்டிருந்தார் என்பதைக் காட்டும் ஏராளமான ஆதாரங்கள் பைபிளில் காணப்படுகின்றன என்பதை எடுத்துக் காட்டினார்கள். பைபிளில் வருவதைப் போன்று, இயேசுவின் இறுதி வார்த்தைகளான 'ஏலீ ஏலீ லிமா சபக்தானீ – என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?' என்பது இயேசுவின் உறுதிப்பாடற்ற நிலைமையைத் தெளிவாகக் காட்டுகிறது.



2. அந்தக் கிறித்தவர் எழுப்பியிருந்த இன்னொரு ஆட்சேபணை, திருக்குர்ஆனின் கருத்துப்படி, முஹம்மது (ஸல்) அவர்களுக்கு எந்த அற்புதமும் வழங்கப்படவில்லை. (திருக்குர்ஆனின் அன்கபூத், பனீ இஸ்ராயீல் ஆகிய அதிகாரங்கள் பார்க்க.)

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் அந்த இரு வசனங்களையும் முழுமையாக மேற்கோள் காட்டி மேற்கண்ட ஆட்சேபணையை மறுத்தார்கள்.

சூரா அன்கபூத்தின் 51–54 வசனங்கள் கூறுவதாவது, 'அவருடைய இறைவனிடமிருந்து அவருக்கு எந்த அடையாளங்–களும் இறக்கப்படவில்லை' என்று அவர்கள் கூறுகின்றனர். நீர் கூறுவீராக. அடையாளங்கள் அனைத்தும் அல்லாஹ்விற்கே உரியன. நிச்சயமாக நான் மிகத் தெளிவான எச்சரிக்கை செய்பவனே ஆவேன்.



அவர்களுக்குப் படித்துக் காட்டப்–படுகின்ற (குர்ஆனாகிய இந்த) வேதத்தை நாம் உமக்கு இறக்கி இருப்பது அவர்களுக்குப் போதுமான அடையாளமாகாதா? நம்பிக்கை கொள்ளும் சமுதாயத்தினருக்கு நிச்சயமாக இதில் (பெரும்) கருணையும் அறிவுரையும் உள்ளன.

நீர் கூறுவீராக! எனக்கும் உங்களுக்கும் இடையில் சாட்சியாக இருப்பதற்கு அல்லாஹ்வே போதுமானவன். அவன் வானங்களிலும் பூமியிலும் உள்ளதை அறிகிறான். மேலும் பொய்யை நம்பி, அல்லாஹ்வை மறுப்பவர்கள்தாம் இழப்பிற்குரியோராவர்.

தண்டனை விரைவில் வர அவர்கள் உம்மைக் கேட்கின்றனர். (அதற்கென) குறிப்பிட்ட ஒரு காலம் இல்லாமல் இருந்திருப்பின் தண்டனை அவர்களிடம் நிச்சயமாக வந்திருக்கும். அவர்கள் அறியாமலிருக்கும் வேளையில் நிச்சயமாக அது திடீரென்று அவர்களிடம் வரும்.'' (29:51–54)

இந்த வசனங்களிலிருந்து தெளிவாவது என்னவென்றால், மறுப்பாளர்கள் தண்டனையின் அடையாளங்களையும், அழிவையும் காண விரும்புகின்றனர். இறைவன் தான் வழங்கியுள்ள கருணையின் அடையாளங்களைக் காணுமாறு கூறுகிறான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அடையாளம் எதுவும் வழங்கப்படவில்லை என்று திருக்குர்ஆனில் எங்குமே கூறப்படவில்லை. அது கூறுவது என்னவென்றால், மறுப்பாளர்கள் கேட்கும் அடையாளங்களை எல்லாம் இறைவன் காட்டுவதில்லை. இறைவன் அடையாளங்களைக் காட்டுகிறான் என திருக்குர்ஆனின் பல வசனங்களிலிருந்து தெளிவாகிறது.

உதாரணமாக, ''அவர்கள் ஓர் அடையாளத்தைக் கண்டால் புறக்கணித்து விட்டு இது தொடர்ந்து நடந்து வரும் மாய வித்தையாகும் என்பர்.'' (54:3)

''தங்களிடம் மிகத் தெளிவான அடையாளம் வந்த பின்னர்...'' (3:106)

ஆனால் இதற்கு நேர் மாறாக இயேசு அடையாளங்களைக் காட்ட மறுத்தார் என பைபிளிலிருந்து தெளிவாகிறது. (மாற்கு 8:11,12 பார்க்க)

திருக்குர்ஆன் கூறுவதாவது: ''மறுமை நாளிற்கு முன்னர் நாம் அழிந்து விடாத அல்லது கடினமான தண்டனை அளிக்காத எந்த ஊரும் (இப்பூமியின் மேற்பரப்பில்) இருக்காது. இது (இறைவனது) நியதியில் (ஏற்கனவே) பதிவு செய்யப்பட்டதாகும்.

நாம் அடையாளங்களை அனுப்பவுதற்கு, அவற்றை முன்னோர்கள் பொய்ப்படுத்தினர் என்பதைத் தவிர எம்மை வேறு எதுவும் தடுத்ததில்லை. (அவற்றிலிருந்தும்) நாம் ஸமூது(வின் சமுதாயத்தவரு)க்கு ஒரு பெண் ஒட்டகத்தைத் தெளிவான அடையாளமாக வழங்கினோம். ஆனால் அவர்கள் அதற்கு அநீதி இழைத்தனர். மேலும் எச்சரிப்பதற்காகவே நாம் அடையாளங்களை அனுப்புகிறோம்.'' (17:59,60)



இதிலிருந்து தெளிவாவது என்னவென்றால், முந்தைய மக்களுக்கு காட்டப்பட்டு அவர்களால் நிராகரிக்கப்பட்ட அடையாளங்கள் மட்டுமே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. பொதுவாக அடையாளங்கள் காட்டப்படுவதையே இந்த வசனங்கள் மறுக்கவில்லை. பின்னர் எவ்வாறு பல்வேறு வகையான அடையாளங்கள் காட்டப்பட்டன; ஏற்றுக் கொள்ள மறுத்தவர்கள் தண்டிக்கப்பட்டனர்; நம்பிக்கை கொண்டவர்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன; திருக்குர்ஆனே ஓர் அடையாளமாகத் திகழ்கின்றது என்பனவற்றை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் விளக்கிக் கூறினார்கள். மேலும் அவர்கள் கூறுகிறார்கள்: திருக்குர்ஆனின் அற்புதமான ஆற்றல் என்னவென்றால், அதனைப் பின்பற்றுவதன் மூலம் இக்காலத்தில் கூட மனிதன் இறை வசனங்களைப் பெற முடியும்.

3. அந்தக் கிறித்தவர் எழுப்பியிருந்த மூன்றாவது ஆட்சேபணை, முஹம்மது (ஸல்) அவர்கள் ஓர் இறை தூதராக இருக்கும்பட்சத்தில், தமது அறியாமையை அவர் வெளிப்படுத்தி இருக்க மாட்டார்கள்; குகையில் இருந்த மக்களின் எண்ணிக்கையைப் பற்றி தவறான தகவல் தந்திருக்க மாட்டார்கள்; சூரியன் சேற்றில் மறைவதைக் கூறியிருக்க மாட்டார்கள். (அப்படியிருக்கும் போது திருக்குர்ஆனின் இந்த வசனங்கள் எப்படி வேத வசனமாக இருக்க முடியும் என்பதே அவர் கேள்வி.)

இதற்கு பதில் கூறும் முகமாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பின்வருமாறு விளக்கமளித்தார்கள்: இந்தக் கூற்றுகள் அனைத்தும் புரிந்து கொள்வதில் ஏற்பட்ட தவறு காரணமாக எழுந்தவையாகும். இஸ்லாத்தின் கொள்கைப்படி, ஓர் இறை தூதர் என்பவர் அனைத்தும் அறிந்தவர் அல்லர். இறைவன் அவருக்கு

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

# சந்திராயனும் ஆதித்தியாவும்

.A. நாஸிர் அஹ்மது



சந்திராயனும் ஆதித்தியாவும் சந்திரனையும் சூரியனையும் ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தால் (ISRO) மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுத் திட்டங்களாகும்.

திருக்குர்ஆன் ஒரு விஞ்ஞானப் புத்தகம் அல்ல. இருப்பினும் அதன் ஆசிரியன் பிரபஞ்சத்தைப் படைத்த இறைவனாக இருப்பதால் அது மனித சிந்தனையைத் தூண்டும் வண்ணம் வானங்கள் பூமியில் உள்ள படைப்புகளைக் குறித்தும் இயற்கை நிகழ்வுகளைக் குறித்தும் வியப்பிற்குரிய முறையில் துல்லியமாக எடுத்துரைக்கிறது. இந்த வகையில் சூரியன் மற்றும் சந்திரனைக் குறித்த பல வசனங்கள் திருக்குர்ஆனில் இடம் பெற்றுள்ளன. அவற்றில் சூரியன் மற்றும் சந்திரனின் படைப்பின் நோக்கத்தைக் குறித்தும், அவற்றின் பல்வேறு நிலைகளைக் குறித்தும் அவற்றின் சுற்றுப் பாதையைக் குறித்தும் கூறப்பட்டுள்ளன.

உதாரணமாக, “மேலும் இரவும் பகலும் சூரியனும் சந்திரனும் அவனது அடையாளங்களைச் சார்ந்தவையே. சூரியனுக்கோ சந்திரனுக்கோ சிரம் பணியாதீர்கள். நீங்கள் அ(வ்விறை)வனையே வணங்குகின்றீர்கள் என்றால் அவற்றைப் படைத்த அல்லாஹ்வுக்கே சிரம் பணியுங்கள்.” (41:38)

“வானத்தில் நட்சத்திரக் கூட்டங்களை அமைத்து, அதில் (ஒளிரும்) சூரியனையும், ஒளி வீசும் சந்திரனையும் அமைத்த (இறை)வன் அருளுக்குரியவனாவான்.” (25:62)

“மேலும் அவன் சூரியனையும் சந்திரனையும் ஊதியமின்றி உங்களுக்கு தொண்டு செய்ய வைத்தான். அவை (இரண்டும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட) பணியினை ஓய்வின்றி செய்து வருகின்றன. மேலும் அவன் இரவையும் பகலையும் ஊதியமின்றி உங்களுக்குத் தொண்டு செய்ய வைத்தான்” (14:34)

“சூரியனும் சந்திரனும் ஒரு நியதிக்கேற்ப இயங்கிக் கொண்டிருக்கின்றன.” (55:6)

“அவன் இரவைப் பகலில் நுழையச் செய்கிறான். பகலை இரவில் நுழையச் செய்கிறான். அவன் சூரியனையும் சந்திரனையும் தொண்டு செய்ய வைத்துள்ளான். இவற்றுள் ஒவ்வொன்றும் (தன் வழியில்) குறிப்பிட்ட ஒரு காலம் வரை செல்கிறது.” (35:14)

“மேலும் சூரியன் அதற்கென நிர்ணயிக்கப் -பட்டுள்ள அதன் இறுதி இருப்பிடம் நோக்கி சென்று கொண்டிருக்கிறது. இது வல்லோனும் ஞானமிக்கோனு -மாகிய (இறை)வன் ஏற்படுத்திய திட்டமாகும். மேலும் சந்திரனை ஒரு முதிர்ந்த கிளை போலாகி திரும்பி வரும் அளவுக்குப் பல நிலைகளை அதற்கு ஏற்படுத்தியுள்ளோம். சூரியனால் சந்திரனை அணுக முடியாது. அவ்வாறே இரவால் பகலை முந்தவும் முடியாது. அவை எல்லாம் ஒரு சுற்றுப் பாதையில் தடையின்றி மிதக்கின்றன.” (36:39-41) (ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் மொழியாக்கம் - Revelation Rationality Knowledge and Truth பக்கம் 313)

சூரியன் மற்றும் சந்திரனைக் குறித்த மகத்தான ஒரு முன்னறிவிப்பு நபிமொழியில் இடம் பெற்றுள்ளது. அது மார்க்கங்களில் முன்னறிவிக்கப்பட்டுள்ளபடி இக்காலத்தில் இமாம் மஹ்தியாக தோன்றியுள்ள ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களின் உண்மையைப் பறைசாற்றும் விண்ணின் அடையாளங்களாக நபிமொழியில் கூறப்பட்ட இரண்டு அடையாளங்களாகும். இந்த முன்னறிவிப்பின்படி ஒரே ரமலான் மாதத்தில் சந்திர கிரகணத்திற்கு சாத்தியமான 3 நாட்களுள் முதல் நாளான பிறை 13-ல் சந்திரனுக்கு இரவின் முதற்பகுதிலும், சூரிய கிரகணத்திற்கு சாத்தியமான 3 நாட்களுள் மத்திய நாளான பிறை 28-ல் சூரியனுக்கு நண்பகலிலும் கிரகணங்கள் ஏற்படும். (சுனன் தார குத்னி, தொகுதி 1, பக்கம் 188). இந்த அடையாளங்கள் துல்லியமாக 1894-ல் நிறைவேறியது.

திருக்குர்ஆனில் காணப்படும் ஏராளமான முன்னறிவிப்பு -களில் மனிதகுலம் விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபடப் போகும் ஒரு காலத்தைக் குறித்த முன்னறிவிப்புகளும் இடம் பெற்றுள்ளன.

“மேலும் வானத்தின் தோல் உரிக்கப்படும்போது,” (81:12)

“ஜின் மனிதர் கூட்டத்தினரே! வானங்கள் பூமி ஆகியவற்றின் எல்லைகளை விட்டும் வெளியேறிச் செல்ல உங்களுக்கு வலிமை இருந்தால் செல்லுங்கள். ஆனால் சான்று வலிமையினாலன்றி உங்களால் செல்ல முடியாது.” (55:34)


மேற்கண்ட வசனங்கள் விண்வெளியியலில் நிகழ்ந்து வருகிற மாபெரும் முன்னேற்றங்களை முன்னறிவிக்கின்றன.

நபிமொழியில் யஃஜூஜ் மஃஜூஜ் வெளிப்படும் காலத்தில் அவர்கள் வானத்தை நோக்கி அம்புகளை எய்வார்கள். (சுனன் இப்னுமாஜா நூல் 36, ஹதீஸ் 155) எனக்

கூறப்பட்டுள்ளது. ய.:.ஜ௲ஜ் மற்றும் ம.:.ஜ௲ஜ் என்பது இக்காலத்தில் ஏகாதிபத்திய சக்திகளாக செயல்பட்டு வரும் அமெரிக்கா மற்றம் அதன் கூட்டணி நாடுகளையும் ரஷ்யா மற்றும் அதன் கூட்டணி நாடுகளையும் குறிக்கிறது.

1950-களிலிருந்தே இவ்விரண்டு சக்திகளும் போட்டி போட்டுக் கொண்டு விண்வெளி ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வருவது உலகம் அறிந்த ஒன்றேயாகும். இதற்காக அவர்கள் சக்திவாய்ந்த ஏவுகணைகளைப் பயன்படுத்தி விண்வெளிக்கு மனிதனை அனுப்பியும் செயற்கைகோள்களை அனுப்பியும் வருகின்றனர்.

1957-ஆம் ஆண்டு ரஷ்யா (அப்போதைய சோவியத் யூனியன்) ஸ்புட்னிக்-1 என்ற முதலாவது செயற்கைகோளை விண்ணில் ஏவியது. அதன் பின்னர் பல்வேறு நாடுகள் சார்பாக பல்லாயிரக்கணக்கான செயற்கைகோள்கள் ஏவப்பட்டன. அவற்றில் பல அவற்றின் ஆயுள் முடிந்த நிலையில் விண்வெளிக் குப்பைகளாக சுற்றி வருகின்றன. தற்போது செயல்படும் செயற்கைக் கோள்களின் (Active Satellites) எண்ணிக்கை மட்டும் 7000-த்திற்கும் அதிகமாகும்.





(https://orbit.ing-now.com/)

1961 -ல் முதன் முதலாக மனிதனை விண்வெளிக்கு அனுப்பி வைத்தது சோவியத் யூனியன். யூரிகஹாரின் முதல் விண்வெளி வீரர் ஆவார். அதன் பின்னர் பல விண்வெளி வீரர்கள் விண்வெளி பயணம் செய்து தமது ஆராய்ச்சிகளைச் செய்து வருகின்றனர்.

முதன் முதலில் ஒரு விலங்கை விண்வெளிக்கு அனுப்பியது. முதன் முதலாக ஒரு பெண்ணை விண்வெளிக்கு அனுப்பியது. முதன் முதலாக சந்திரனின் மேற்பரப்பை அடைந்தது. முதன் முதலாக சந்திரனில் மென்மையான தரையிறக்கத்தை (Soft Landing) செய்தது, சந்திர மண்ணை எடுத்து ஆய்வு செய்தது. முதன் முதலாக விண்வெளி நிலையத்தை அமைத்தது. வீனஸ், செவ்வாய் கிரகங்களில் மென்மையான தரையிறக்கங்களை செய்தது போன்றவை சோவியத் யூனியினின் விண்வெளி சாதனைகளாகும்.

1968-லிருந்து 1972 வரை அமெரிக்கா மேற்கொண்ட தனது அப்பல்லோ திட்டங்களின் மூலம் விண்வெளி வீரர்களைச் சந்திரனுக்கு அனுப்பி சாதனை படைத்தது. 1969-ல் அப்பல்லோ-11 திட்டத்தின் கீழ் சந்திரனில் முதல் முதலாக கால் பதித்தவர் நீல் ஆம்ஸ்ட்ராங் ஆவார். அவருடன் சேர்த்து இதுவரை பன்னிரெண்டு அமெரிக்க விண்வெளி வீரர்கள்





சந்திரனில் இறங்கியுள்ளனர்.

2008 முதல் சந்திரனைக் குறித்து ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) தனது சந்திராயன் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. 14 ஜுலை 2023 அன்று ஏவப்பட்ட சந்திராயன்-3 விண்கலம் விக்ரம் என்ற சந்திரலேண்டர் மற்றும் பிரக்யான் என்ற சந்திரரோவரைக் கொண்டதாகும். சந்திராயன்-3 விண்கலம் 23 ஆகஸ்ட் 2023 அன்று சந்திரனின் தென் துருவம் அருகே வெற்றிகரமாக மென்மையாக தரையிறங்கியது. இதன் மூலம் ரஷ்யா, அமெரிக்கா, சீனாவிற்கு அடுத்த படியாக சந்திரனில் மென்மையாக தரையிறங்கிய நான்காவது நாடாக இந்தியா திகழ்கிறது. மேலும் சந்திரனில் தென் துருவத்திற்கருகில் தரையிறங்கிய முதலாவது நாடு என்ற பெருமையையும் இந்தியா பெற்றுள்ளது. சந்திரனில் தண்ணீர் இருப்பு குறித்தும், அரிதான கனிமங்களின் இருப்பு குறித்தும் அங்கு குடியிருப்பிற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் ஆய்வு செய்வது சந்திராயன் திட்டத்தின் முக்கியமான குறிக்கோள்களாகும்.




1960 முதலே அமெரிக்கா சூரியனைக் குறித்த தனது ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. இதுவரை அமெரிக்க விண்வெளி நிறுவனமான NASA, ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் மற்றும் ஜெர்மனி விண்வெளி நிறுவனம் ஆகியவை மட்டுமே சூரியனை ஆய்வு செய்வதற்காக தனியாகவோ கூட்டாகவோ விண்வெளி பயணத் திட்டங்களை செயல்படுத்தியுள்ளன. கடந்த நான்கு ஆண்டு-களாக அமெரிக்காவின் பார்க்கர் சோலார் ப்ரோப் என்ற விண்கலம் சூரியனின் மேற்பரப்பில் இருந்து 6.5 மில்லியன் தூரத்தில் ஒரு சுற்றுப் பாதையை அமைத்துக் கொண்டு சூரிய ஆய்வில் ஈடுபட்டு வருகிறது. இதுவே சூரியனுக்கு மிக அருகில் சென்ற விண்கலம் ஆகும்.




இந்தியாவின் முதல் சூரிய ஆய்வு விண்கலன் ஆதித்தியா-L1 ஆகும். இந்த விண்கலம் செப்டம்பர் 2, 2023

அன்று விண்ணில் ஏவப்பட்டது. பூமியிலிருந்து 15 லட்சம் கி.மீ தொலைவில் உள்ள லாக்ராஞ்சியன் பாயிண்ட் ஒன் (L1) என்னும் பகுதியில் இந்த விண்கலம் நிலைநிறுத்தப்பட உள்ளது. இந்த தூரம் பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலான தூரத்தில் 1% ஆகும். அங்கு இருந்தவாறு இந்த விண்கலம் விண்வெளி வானிலை (Space Weather), சூரியனின் வெளிப்புறப் பகுதியின் வெப்பச் சூழல், கதிர்வீச்சு, காந்தப்புலம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளது.

இது தவிர வேற்று கிரகங்களில் உயிரினங்கள் வாழ்கிறதா என்பதை அறிய பல்வேறு விண்வெளி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக அமெரிக்கா பயோனியர் மற்றும் வாயேஜெர் விண்கலன்களை 1970-களில் ஏவியது. இவற்றுள் வாயேஜெர்-1 விண்கலம் சூரிய மண்டலத்தைக் கடந்து 2012-ல் விண்மீன்களிடையே ஊடகத்தை (Interstellar Space) அடைந்து தொடர்ந்து பயணித்தவாறு உள்ளது. கடந்த 46 ஆண்டுகளாக பயணிக்கும் இந்த விண்கலம் மிக நீண்ட தூரம் பயணிக்கின்ற முதலாவது விண்கலம் ஆகும். இதன் குறிக்கோள்களுள் ஒன்று வேற்றுக் கிரக உயிரிகளுடன் தொடர்பு கொள்வதற்காக ரேடியோ சமிஞ்ஞைகளை அனுப்புவதுமாகும்.

டிசம்பர் 25, 2021-ல் அமெரிக்காவின் NASA, ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் (ESA) மற்றும் கனடிய விண்வெளி நிறுவனம் (CSA) ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி (James Web Space Telescope) என்ற விண்வெளி ஆய்வுக்கலன் ஏவப்பட்டது. இது ஓர் அகச்சிவப்பு தொலைநோக்கியாகும் (Infrared Telescope).



இந்த தொலைநோக்கி நமது கண்களால் அறிய முடியாத ஒளியின் அலைநீளத்தில் விண்வெளியைப் பார்க்கிறது. இதன் முக்கிய குறிக்கோள் பெருவெடிப்பிற்குப் பிறகு தோன்றிய முதல் விண்மீன் திரள்களைக் குறித்து ஆய்வு செய்வதுடன் பூமியைப் போன்ற பிற கோள்கள் இருப்பின் அவற்றைக் கண்டறியவும் அவற்றில் உயிரினம் இருப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்வதுமாகும். ஜுலை 2022-ல் வெளியிடப்பட்ட ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி படம்பிடித்த பூமியிலிருந்து பல்லாயிரக்கணக்கான ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள பேரண்டத்தின் வண்ணப்படங்கள் உலகை வியப்பில் ஆழ்த்தின.

இந்த ஆய்வுகள் ஒருபுறமிருக்க, வேற்று கிரகங்களில் உயிரினங்கள் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக பெரும்பாலான விஞ்ஞானிகள் தற்போது ஒப்புக் கொள்கின்றனர். எனினும், இதுவரை நடந்துள்ள ஆய்வுகளின் அடிப்படையில் வேற்று கிரகங்களில் உயிர் வாழ்வதற்கான உறுதியான எந்த ஒரு சான்றையும் விஞ்ஞானம் முன் வைக்கவில்லை. ஆனால் திருக்குர்ஆன் இவ்விஷயம் தொடர்பாக வியக்கத்தக்க கருத்துகளைப் பதிவு செய்துள்ளது.

“வானங்களிலும் பூமியிலும் உள்ளவையெல்லாம் அவனது தூய்மையினை எடுத்துரைக்கின்றன. மேலும் அவன் வல்லவனும் நுண்ணறிவுள்ளவனுமாவான்.” (59:25)

இக்காலத்தில் இமாம் மஹ்தியாகவும் வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் தோன்றியுள்ள ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் இறைவனால் தமக்கு வழங்கப்பட்டுள்ள ஞானத்தின் மூலம் திருக்குர்ஆனின் ஆழிய கருத்துகளை நமக்கு விளக்கியுள்ளாரகள். அவர்கள் மேற்கண்ட வசனத்திற்கு இவ்வாறு விளக்கம் அளித்துள்ளார்கள். “இந்த வசனம் விண்ணில் உள்ள கோளங்களிலும் வசிப்பவர்கள் உள்ளனர். மேலும் அவர்கள் இறை வழிகாட்டலைப் பெறுகின்றனர் என்பதை சுட்டிக் காட்டுகிறது” (இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம், ஆங்கிலப் பதிப்பு பக்கம் 99)

நமது பூமியைப் போன்று வேறு பல பூமிகளும் இருக்கின்றன என்றும் அவற்றில் வாழ்பவர்களுக்கு நமக்கு அருளப்படுவதைப் போன்றே மார்க்கச் சட்டங்கள் (ஷரீஅத்) அருளப்படுகின்றன என்பதையும் கீழ்க்காணும் வசனம் எடுத்துரைக்கிறது:

“அல்லாஹ் ஏழு வானங்களையும், அவற்றைப் போன்று பூமியையும் படைத்தான். அல்லாஹ் எல்லாவற்றிற்கும் ஆற்றல் உடையவன் என்பதும், அல்லாஹ் எல்லாவற்றையும் (தனது) அறிவால் சூழ்ந்து கொள்கிறான் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்வதற்காக அவற்றிற்கிடையே (இறைக்) கட்டளை இறங்குகிறது.” (65:13)

பூமியைப் போன்று பல கோளங்கள் இருப்பதையும் அவற்றில் உயிர் இருப்பதையும் ஆணித்தரமாகக் கூறும் திருக்குர்ஆன், ஒருபடி மேலே சென்று அவற்றிற்கும் நமக்குமிடையில் தொடர்பு ஏற்படும் காலம் வரவிருக்கிறது என்பதையும் முன்னறிவிக்கிறது.

“மேலும், வானங்கள் பூமி ஆகியவற்றின் படைப்பும், அவ்விரண்டிற்குமிடையில் உயிரினங்களின் வகையினை அவன் பரப்பி இருப்பதும் அவனுடைய அடையாளங்களைச் சேர்ந்தவையாகும். அவன் விரும்பும்போது, அவர்கள் எல்லாரையும் ஒன்று திரட்டுவதற்கு அவன் ஆற்றல் பெற்றவனாவான்.” (42:30)

இந்த வசனத்திற்கு விளக்கமாக ஹஸ்ரத் நான்காவது கலீ஼ஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:


“இந்த வசனத்தில் உள்ள ‘தாப்பா’ (உயிரினங்கள்) என்ற சொல் பூமியில் மேற்பரப்பில் ஊர்ந்து அல்லது நகர்ந்து

செல்கின்ற அனைத்து உயிரினங்களையும் குறிப்பிடுகிறது. பறக்கின்ற அல்லது நீரில் நீந்துகின்ற உயிரினங்களுக்கு இந்த சொல் பொருந்தாது. ஆவி வடிவிலான எந்த உயிரினத்திற்கும் இந்த சொல் பொருந்தாது. அரபியில் பேயையோ அல்லது வானவர்களையோ 'தாப்பா' என்று குறிப்பிட மாட்டார்கள். இந்த வசனத்தின் இரண்டாவது பகுதி வேற்றுக் கிரகங்களில் உயிர் இருப்பதற்கான சாத்தியக்கூறு இருப்பதாக கூறவில்லை. மாறாக, வேற்றுக் கிரகங்களில் உயிரினங்கள் உள்ளன என்பதை ஆணித்தரமாக அறிவிக்கின்றது. இருப்பினும், இந்த வசனம் இத்துடன் நிற்கவில்லை. வசனத்தின் இறுதிப் பகுதியை நாம் படிக்கும்போது வியப்பிற்கு மேல் வியப்பு ஏற்படுகிறது. அவன் (அல்லாஹ்) அவன் விரும்பும்போது விண்கோள்களில் உள்ள உயிரினத்தையும் பூமியில் உள்ள உயிரினத்தையும் ஒன்று சேர்ப்பான்.

وَهُوَ عَلٰى جَمۡعِهِمۡ اِذَا يَشَآءُ قَدِيۡرٌ அவன் விரும்பும் போது அவற்றை ஒன்று சேர்க்க (ஜாமிஹிம்) ஆற்றல் பெற்றவன் ஆவான்.

இந்த வசனத்தில் இடம் பெற்றுள்ள 'ஜாமிஹிம்' என்ற அரபிச் சொல் பூமியில் உள்ள உயிரினத்தையும் வேறோர் இடத்திலுள்ள உயிரினத்தையும் ஒன்று சேர்ப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த சந்திப்பு எப்போது நடக்கும் என்று கூறப்படவிலலை. இந்த சந்திப்பு இங்கு பூமியில் வைத்து நடைபெறுமா அல்லது வேறெங்கும் நடைபெறுமா என்பதுவும் கூறப்படவில்லை. ஒன்று மட்டும் உறுதியாக கூறப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு இறைவன் நாடும் போது நிச்சயமாக நடைபெறும். 'ஜமா' என்ற சொல் பௌதீக சந்திப்பையோ அல்லது தொடர்பு கொள்வதையோ குறிக்கும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்தத் தொடர்பு எப்போது எப்படி நிகழும் என்பதை வருங்காலம் மட்டுமே கூற முடியும். ஆனால் 1400 ஆண்டுகளுக்கு முன்பே இத்தகைய ஒரு சாத்தியக்கூறு பற்றி முன்னறிவிக்கப்பட்டிருப்பதே ஓர் அற்புதம் ஆகும். திருக்குர்ஆனின் இந்த இறைஅறிவிப்பு விண்ணியல் ஓர் அறிவியல் துறையாக பிறந்திராத காலத்தில் செய்யப்பட்டதாகும்." (Revelation, Rationality, Knowledge and Truth பக்கம் 330-331)

திருக்குர்ஆனின் முன்னறிவிப்புகள் ஒவ்வொரு காலத்திலும் எவ்வாறு விஞ்ஞான ஆய்வுகளுக்கு முன்னால் செல்கிறது என்பதற்கு இது ஒரு சான்றாகும்.




*(20-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

அறிவித்துக் கொடுத்ததை மட்டுமே அவர் அறிவார். குகையில் இருந்த மனிதர்களின் எண்ணிக்கையைப் பற்றித் திருக்குர்ஆன் கூறும் தகவல் தவறானது என்ற கூற்று ஓர் அனுமான கூற்றுதான். அதற்கான ஆதாரங்கள் எதுவும் தரப்படவில்லை. எனவே அதன் மூலம் எதனையும் தீர்மானிக்க முடியாது. சூரியன் சேற்றில் மறைகிறது என்பது ஒரு வருணனைதானே தவிர அது ஒன்றும் உள்ளதை உள்ளபடியே கூறும் கூற்றல்ல. தாம் காணுகின்ற காட்சியை வருணிக்கும் ஒரு செயலேயாகும். சில நேரங்களில் அவ்வாறு சேற்றில் மறைவது போன்று காட்சி அளிப்பதை மறுக்க முடியாது. இதில் எந்தத் தவறும் இல்லை. இந்த அடிப்படையில் பார்க்கும்போது இயேசுவின் இரண்டாவது வருகையின்போது நிகழவிருப்பதாகத் தங்களின் வேதத்தில் கூறப்பட்டுள்ள விஷயங்களான, நட்சத்திரங்கள் உதிர்ந்து விழுவது, சூரியனும் சந்திரனும் இருளடைந்து போவது ஆகியவற்றை கிறித்தவர்கள் எவ்வாறு விளக்குவார்கள். ஒரே ஒரு நட்சத்திரம் விழுந்தால் பூமி முழுவதையும் அது நிர்மூலமாக்கி விடும். சூரியன் ஒளிகொடாது போனால் விண்ணிலிருந்து இறங்கி வரும் மனித குமாரனை மக்கள் எப்படி பார்க்க முடியும்? அஞ்சுமன் ஹிமாயத்தே இஸ்லாம் அமைப்பு இந்தக் கேள்விகளையும், அவற்றிற்குரிய பதில்களையும் ஒரு சிறிய நூல் வடிவில் தமது சொந்தச் செலவில் அச்சிட்டு வெளியிட்டது. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை மிகவும் பாராட்டியது.

(தொடரும்...)

வானங்களிலும் பூமியிலும் உள்ளவையெல்லாம் அவனது தூய்மையினை எடுத்துரைக்கின்றன. மேலும், அவன் வல்லவனும் நுண்ணறிவுள்ளவனுமாவான். (59:25)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த வசனத்திற்கு இவ்வாறு விளக்கம் அளித்துள்ளார்கள்: "இந்த வசனம் விண்ணிலுள்ள கோளங்களிலும் வசிப்பவர்கள் உள்ளனர். மேலும், அவர்கள் இறை வழிகாட்டலைப் பெறுகின்றனர் என்பதை சுட்டிக் காட்டுகிறது."

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam